அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 9 இதழ்: 6 விலை 25 ந.பை	ஹேவிளம்பி ஹு புரட்டாசி மீ செப்டெம்பர்—அக்டோபர் '57	வருட சந்தா ரூ. 2-4-0

-Page-261-
Acc. No 18582



இறந்த மூலன் பசுக்கள் துயர் நீங்கி இன்புற
அவனுள் புகுந்த சித்தர் திருமூலர் ஆகிறார்.
பெரியபுராணச் சித்திர விளக்கம் 42 பக்கம் 243

262

பொருளடக்கம்

			பக்கம்
1. அகஸ்தியர் முருகன் 4	(திருப்புகழ் மணி)	...	241
2. திருமூல காயனுர்	(கி. வா. ஜகந்நாதன்)	...	243
3. விக்ரமர்	(ரஸபதி)	...	246
4. அன்பெனும் செல்வம்	(ஸ்ரீமதி சிவானந்த விஜயலக்ஷ்மி)	...	257
5. கீதை காட்டும் பாதை	(அ. ராமமூர்த்தி)	...	265
6. செந்நெல் வைத்த திருஅருள்	(வ. சு. செங்கல்வராய பிள்ளை)	...	268
7. இதுதான் பொருள்	(கி.வா.ஜ.)	...	272
8 திருவாலங்காட்டுத் திருப்புகழ் விரிவுரை	(குகஶ்ரீ)	...	276
9. ஸ்ரீ அருணகிரிநாதர் பெருவிழா	(அனுபவி)	...	282
10. ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி	திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.	...	284
11. Kinship	*(Thiruppugal Mani)*	...	288

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ" முதல் பங்குனி மீ" முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ" முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முக்கிய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 9	ஹேவிளம்பி௵ புரட்டாசிமீ செப்டம்பர்-அக்டோபர்—57	இதழ் 6

அகஸ்தியர் முருகன்—4

(திருப்புகழ் மணி)

முருகனைக் கண்ட பக்தர்கள் மனோநிலையை வகுக்கின்றார் அகஸ்தியர். ப்ரம்ம விசாரத்திலும் பக்தி யனுபூதியிலும் ஈடுபட்ட மகான்கள் தங்கள் தேகத்தைப் பற்றிய விசாரங்களை மறந்திடுவார்களாம். தேகமே இறந்தது போல் நின்றுவிடுமாம். அருணகிரியார் கந்தரலங்காரத்தில் உபதேசிப்பதைப் பார்ப்போம்.

*சொன்ன க்ரௌஞ்ச கிரியூடுருவத் துளைத்த வைவேல்
மன்ன! கடம்பின் மலர்மாலை மார்ப! மௌனத்தை யுற்று
எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு உன்னை நினைந்திருந்
தேன்! இறந்தே விட்டது இவ்வுடம்பு!"*

உடம்பை மறந்து பிறகு முருகனை நினைக்க முடியாது. ஆனால் முருகனை நினைந்து ஜீவன் முக்தி நிலையைப் பெறலாம். உடம்பை மறக்கலாம். மறந்தது

***

*ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.*

இறந்தது ஆகையால் தேகத்தை மறந்திருத்தலே தேக மிறந்தது ஆகும். அகஸ்தியர் பாடுகின்றார்.

"தேக விசாரம் மறக்கையிலே——சிவ
ஜீவ விசாரம் பிறக்கையிலே
ஆகும் அருட்பணி செய்கையிலே—கங்கை
ஆறு கலந்திடும் பொய்கையிலே."
"ஷண்முக நாயகன் தோன்றிடுவான்—சிவ
சத்குரு நாயகன் தோன்றிடுவான் "

உடலை மறந்தவர்க்கு மானம் அபிமானம் இரண்டும் இல்லாததால் மானாபிமானத்தை விடுத்து, முருகனைச் சரண் அடைந்தவர்க்கு முருகன் ப்ரத்யக்ஷம் என்பது வெளியாச்சுது. த்ரௌபதியைக் கண்ணன் காத்து ரக்ஷித்தான். எப்போது? சேலையின் பிடிப்பையும் விட்டு மெய்ம்மறந்து கிருஷ்ணா! ஹரி! என்று உலக முக்குண உணர்ச்சி யாவும் இறந்து நின்ற தருண மல்லவோ கண்ணன் அருள் வந்து அவள் மானத்தைக் காப்பாற்றியது. முருகன் அன்பினில் திளைத்து, அவன் பக்தர்கள் பாதமே துணையென்று எண்ணி, அவன் தலைமையில் ஏற்படும் சத்சங்கத்தை நாடும் அன்பர்கள் மானத்தை முருகன் காக்கவில்லையா! இவ்வகைக் காலங் களில் முருகன் தோன்றுவான் என்றார் அகஸ்தியர்.

மானாபிமானம் விடுக்கையிலே—தீப
மங்கள ஜோதி எடுக்கையிலே
ஞானானுபூதி உதிக்கையிலே—குரு
நாதனை நாடித் துதிக்கையிலே
ஷண்முக நாயகன் தோன்றிடுவான்—சிவ
சத்குரு நாயகன் தோன்றிடுவான்.

உள்நிலாவி அவர் சிந்தையுள் நீங்கா ஒருவன் இடமென்பர்
மண்நிலாவும் அடியார் குடிமைத் தொழில் மல்கும் புகலூரே

"வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
தம் இனத்தகத்தான்"

என்பது அப்பர் ஸ்வாமிகள் வாக்கியம். அகஸ்தியர் வாக்கியமும் முருகன் வாக்கியமாம்.

"கோலமுடன் காலை மாலையிலும்—இரு
கோளங்கள் வானில் வரப் புரிவான்
ஓலையில் ஆணியை நாட்டும் முன்னே—என்தன்
உள்ளத்திலே கவி ஊட்டிடுவான்."

(தொடரும்)

அட்டைப்பட விளக்கம் :

திரு மூல நாயனர்

(கி. வா. ஜகந்நாதன்.)

திருக்கைலாயத்தில் நந்தியெம்பெருமானுடைய உபதேசம் பெற்ற சித்தர்கள் பலர் உண்டு. அவருள் ஒருவர், பொதியில் மலையில் இருந்த அகத்திய முனிவரைப் பார்த்து அவருடன் சிலகாலம் இருந்து விட்டு வரலாம் என்ற எண்ணத்தால் புறப்பட்டார். செல்லும் வழியில் திருக்கேதாரத்தை வழிபட்டு, நேபாளத்தில் எழுந்தருளி யிருக்கும் பசுபதீசுவரரை வணங்கி, கங்கைக் கரைக்கு வந்தார். அவ்வாற்றில் நீராடிக் காசி விசுவேசரைத் தரிசித்துக் கொண்டு ஸ்ரீசைலத்துக்கு வந்து இறைவனைப் போற்றித் திருக்காளத்திக்குச் சென்று காளத்தியப்பனைத் தொழுது தென்றிசை நோக்கி வந்தார்.

திருவாலங்காடு, காஞ்சிபுரம் என்னும் தலங்களைத் தரிசித்துக் காஞ்சியில் இருந்த யோகியர்களுடன் அளவளாவிச் சில நாள் தங்கினர். அப்பால் திருவதிகையை வழிபட்டு விட்டுத் தில்லையை அடைந்தார். நடராசப் பெரு-

---

கொய்து பக்தர் மலரும் புனலும் கொடு தூவித் துதி செய்து
மெய்தவத்தின் முயல்வார் உயர் வானகம் எய்துவாரே.

மானைக் கும்பிட்டுத் தெவிட்டாத இன்பம் பெற்று அங்கே சில நாள் வைகினார். பின் காவிரிக் கரையை அடைந்து திருவாவடுதுறையை கண்ணினார். அங்கே ஆலயத்துக்குச் சென்று எம்பெருமானை வணங்கிய பொழுது, அங்கேயே இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தே எழுந்தது. எழுந்தாலும் மீண்டும் பயணம் தொடங்கிப் புறப்பட்டுச் செல்லுகையில் அவ்வூர்க் காவிரிக்கரையில் பல பசுக்கள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டார்.

அருகில் அந்தணர்கள் வாழ்கின்ற சாத்தனூரிலிருந்த மூலன் என்னும் பெயருடைய ஆயன் அந்தப் பசுக்களை இங்கே அழைத்து வந்து மேய்ப்பது வழக்கம். அன்றும் மேய்க்கும் போது அவனுடைய வாழ் நாளுக்கு இறுதி வந்து எய்தியமையின் உயிர் நீங்கினான். அவன் உடலம் கீழே கிடக்க, ஆவினங்கள் அந்த உடலைச் சுற்றிச் சுற்றி வந்து நாவால் வருடின; மோந்து பார்த்தன; கண்ணீர் விட்டுப் பெருமூச் செறிந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட சித்தர் திருவுள்ளம் இரங்கி, இந்தப் பசுக்களின் துயரத்தை நீக்கும் வழி யாது என்று யோசித்தார். மீட்டும் ஆயன் உயிர்பெற்று எழுந்தாலன்றிப் பசுக்களின் துயரம் நீங்காதென்று தெரிந்து தம்முடைய யோக ஆற்றலால் தம் உடலை ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டு ஆயன் உடலுக்குள் புகுந்து எழுந்தார்.

தம்மைப் பாதுகாப்பவன் எழுந்தவுடன் பசுக்கள் அவனை நக்கி மோந்து இன்புற்றுத் துள்ளிக் குதித்து மேயச் சென்றன. திருமூலர் அந்தப் பசுக்கள் மேயும் இடத்துக்குச் சென்று அவற்றை மேய்த்துப் பிறகு தண்ணீர் காட்டிப் பாதுகாத்தார். கதிரவன் மறைந்தவுடன் பசுக்கள் தம் கன்றை நினைத்து சாத்தனூரை நோக்கிப் புறப்பட்டன. திருமூலர் அவற்றின் பின்னே சென்றார். ஒவ்வொரு மாடும் தன் தன் வீட்டில் புக, அவர் நின்ற போது ஆயனுடைய மனைவி, தன் கணவன் வர நேரமாகிவிட்டதென்று

பந்தி என்னும் இசை பாடிய மாந்தர் பரமன் அடிசேர்ந்து
குற்றம் இன்றிக் குறைபாடொழியாப், புகழோங்கிப் பொலிவாரே.

அறிந்து காத்திருந்தவள் திருமூலரைக் கண்டவுடன், "என் இவ்வளவு நேரம்? உடம்புக்கு ஏதேனும் தீங்குண்டோ?" என்று சொல்லி அவரைத் தொடச் சென்றாள். அவர் விலகி நிற்க, "ஏன் இப்படி இருக்கிறீர்கள்?" என்று அவள் கேட்க, "எனக்கும் உனக்கும் தொடர்பு ஒன்றும் இல்லை" என்று திருமூலர் சொல்லிவிட்டு அவ்வூரில் உள்ள பொது மடத்துக்குச் சென்று யோகத்தில் இருக்கத் தொடங்கினார்.

இரவெல்லாம் துயிலாமல் வருத்தத்துடன் இருந்த ஆயனுடைய மனைவி காலையில் திருமூலர் வேறுபாட்டோடு இருப்பதை ஊரவருக்கு உரைக்க, அவர்கள் சென்று மடத்தில் யோகநிலையில் அமர்ந்திருந்தவரைக் கண்டு வியந்தார்கள். "இவருக்குப் பித்துப் பிடிக்க வில்லை. வேறு ஒரு பெண்ணிடத்தில் வைத்த அன்பினால் புறக்கணிக்க வில்லை. சித்த விகற்பம் நீங்கித் தெளிந்த சிவயோக நிலையில் இருக்கிறார். பழைய நிலைப்படி இனி உறவு முறை கொள்ள இயலாது" என்று அந்தப் பெண்ணிடம் கூறி வீட்டுக்கு அனுப்பினார்கள்.

திருமூலர் யோகு தெளிந்து பசுக்களுடன் திருவாவடுதுறைக்குச் சென்று மறைத்து வைத்திருந்த தம் உடலைப் பார்த்தபோது அதனை அங்கே காணவில்லை. திருமூலர் வாயிலாகச் சிவாகமப் பொருள் தமிழில் வெளி வர வேண்டும் என்பது சிவபெருமான் திருவுள்ளமாதலின் அவ்வுடம்பை மறைத்தருளினான். இதனை ஞானப்பார்வையால் உணர்ந்த திருமூலர் திருவருளின் வழியே நடக்க எண்ணி, திருவாவடுதுறைக் கோயிலை அடைந்தார். அக்கோயிலில் உள்ள தலத்திரு விருட்சமாகிய அரசமரத்தின் அடியில் அமர்ந்து சிவயோகம் செய்யத் தலைப்பட்டார்.

யோக நிலையில் இருந்த திருமூலர் ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் அடங்கிய திருமந்திர மாலை என்ற அரிய நூலை அருளினார். மூவாயிரம் ஆண்டுகள் யோகத்தில் இருந்து பிறகு இறைவன் திருவருளால் மீட்டும் திருக் கைலாயம் சென்று எம்பெருமானைப் பிரியாமல் உறையும் பெருவாழ்வு பெற்றார்.

மத்தம் வைத்த பெருமான் பிரியாது உமைநின்ற வலிதாயம்
சித்தம் வைத்த அடியாரவர்மேல் அடையா மற்(று)இடர் நோயே.

திருமூலர் திருவாய் மலர்ந்தருளிய திருமந்திர மாலை திருமந்திரம் என்றும் வழங்கப் பெறும். அது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கைப் பற்றியும் சொல்லும் ஒன்பது தந்திரங்கள் அமைந்தது. சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகச் சேர்க்கப் பெற்றிருக்கிறது.

தேவி தாஸர்கள் 18

விக்ரமர்

(ரஸபதி)

சோழ வளநாடு சோறுடையது, என்பர் அதற்குக் காரணம், வற்றாத பொன்னி வளம். சூரிய குல திலகரான சோழர்கள், பயன் விளைய அந்நாட்டைப் பரிபாலித்தனர்.

மன்னர் வீர சோழர்க்கு இரு மக்கள். மூத்தவர் விக்கிரம சோழர்; இளையவர் பெயர் சல்யாமிதர். மூத்தது மோழை; அடுத்தது காளை; இது மூதறிஞர் சொல்லும் மொழி.

அதற்கு ஏற்ப, இளம் பருவம் முதல், விக்ரமர் எவருடனும் உரையாடார். கல்வியிற் கன்றுனார். அகண்ட யோக மோட்சத்தை அருளும் அம்பிகை திருவடிகளை, அனுதினமும் வந்தித்தார். ஆலயத்திற்குச் செல்வார். வலம் வரல்; வாயாரப் பாடல்; ஜென்ம நாசம் செய் ஜெனனி மந்திர ஜெபம்; திருவடித் தியானம்; ஊன்றி இவைகளில் பல நேரம் உறவு. ஆணெல்லாம் சிவம்; பெண்ணெல்லாம் தேவி; பயனுண இது அவர் பாவனை.

மணப் பருவம் வந்தது. வீர சோழர், மக்கள் இருவர்க்கும் மணத்தை முடித்தார் காலத்தில் விக்ரமர்க்குப் பட்டம் கட்டினார். எம்பெருமாட்டி திருவடிகளையே எண்ணும் விக்ரமர்க்கு, இகவாழ்வு இடையூறாக இல்லை. எல்லாம் தேவி லீலை; மறுக்க என்ன உரிமை நமக்கு? என்று மனம் கொண்டார்.

இளம் பருவத்திலிருந்தே சல்யாமிதன், எழுந்திருக்கக் காலை எட்டு மணி ஆகும். தந்த சுத்தியானதும் தொந்தியை நிறைப்பான். அரண்மனைச் சிப்பந்திகளிடம் அரட்டை யடிப்பான்.

வையம் வந்து பணியப் பிணி தீர்த்துயர்கின்ற வலிதாயம்
உய்யும் வண்ணம் நினைமின்: நினைந்தால் வினை தீரும் நலமாமே.

வித்தையென்றால் வேம்பு. தாய் தந்தையர்க்கு அஞ்சி, பாழும் விதியே என்று படிப்பான். வீங்கி வயிறு வெடிக்கும் அளவு, உச்சிப் போதில் உணவு கொள்வான். உடனே பளபளத்த மல ரணையில் படுப்பான். மாலை ஐந்து மணிக்கு எழுவான். உடனே சிற்றுண்டி உண்பான். ஊரைச் சுற்றி உலாவி வருவான்.

போவோர் வருவோரான பாவையரை, பார்த்த கண் வாங் காது பார்ப்பான். சாதகமோ, தீவினையோ, பாதகம் என்றால் அவ னுக்குப் பால் சோறு

மணமானால் குணமாவான் என்று தாய் தந்தையர் எண்ணி னர். அப்படியே ஒரு பாவையை மணமுடித்தும் பயனில்லை.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்; என்ன செய்யலாம்; இளையவன் இடத்தில், வரவர அதிக்ரமமே வளர்ந்தது.

வீர சோழர் இது கண்டு வெதும்பினர். இதயம் வெடித்தது. அதே கவலையால், மாபெரும் இவ்வுலகை மறந்தார். தேவியும் அவரைத் தொடர்ந்தாள்.

தம்பியின் கவலையால் ஈன்றோர் இறந்ததை, எண்ணி விக்ரமர் கண்ணீர் வடித்தார். பயம் கூட்டினார். நயம் காட்டினர். பல வழியில் முயன்றார். நாய் வாலை நிமிர்த்த முடியுமா? அது போல், தம்பி குணத்தை மாற்ற முடியாமல் தளர்ந்தார். அம்பிகை திரு வுளம் போல் ஆகும் என்று, அமைதி யடைந்தார்.

தட்டிப் பிடிப்பார் இல்லை; மேலும் மேலும் தவறுகள். அவனை இகழ்வார் எங்கும் பெருகினர். புனித அண்ணனை எவரும் புகழுகின்றார்; அதைக் கேட்கும் போதெல்லாம் புழுங்கினான். கறுத்தது மனம்; கண்கள் அதைக் காட்டின. நீதியும் நேர்மையும் உடையவர் விக்ரமர் என்று, களித்துப் பாராட்டுவாரைக் கடுகடுத் தான். கவிஞர் அரசரைக் கற்பகம் என்பர். இது, கொள்ளை யடிப்பவர் குரல் என்று குறுகுறுத்தான். கொண்டல் போல் உத வும் கோபதி என்பர் குடி மக்கள். வரியைக் குறைத்தால் எவரும் வாழ்த்துவது சகஜம்; போலி மக்கள் என்று பொரிந்து தள்ளி னான். அம்மையை ஆராதிக்கும் அன்பர் என்று கூறுவார் கூற, இது சோம்பேறிகள் கூடிச் சொல்லும் சொல் என்பான். காலம்வரும் விக்ரமனைப் புகழ்வார் தலையை வீசி விடுகிறேன். நாறற வாயால், இப்படி நாலாயிரம் சொல்வான்.

மகத்தான மன்னர்க்கு, இப்படியும் ஒரு தம்பி; பாவமே பாவம் என்று படபடத்தார் பலர். "ஸ்ரீதேவி பிறந்த செய்ய திருப் பாற்கடலில், மூதேவி ஏன் பிறந்தாள் முன்?" இப்படித்தான் எதிர்

மன்னிறைந்த புகழ்கொண் டடியார்கள் வணங்கும் வனிதாயத்(து)
உண்ணிறைந்த பெருமான் கழலேத்த நம் உண்மைக் கதியாமே.

முறையும் உடன்பாடுமாக இருக்கும் இந்த உலகம் என்று, ஆறி மனம் தேறினர் அறிஞர். நாள்கள் பல இப்படியே நடந்தன.

சூழ்ச்சிப் புயல், சுழன்றடித்தது. பொங்கிப் பணம் எப்புறமும் புரண்டது. சுயநலம் எங்கும் சுழித்தது. பதவி வேட்கையும் பண நடமாட்டமும், பயங்கர சதி செய்தன. முடிவு என்ன? சேனாதிபதியும், அமைச்சர் இருவரும் சல்யாமிதன் வசமாயினர்.

இராஜ விஸ்வாசிகளைச் சிறையில் அடைத்தனர். குடிகள் இது கண்டு குமுறினர். ஆதிமுதல் நிகழ்ப்பவைகளை, முதலமைச்சர் அறிந்திருக்கிறார். உள்நாட்டுக் குழப்பம் எழாதபடி, எப்படியோ முயன்றார். கட்டு மீறியது கதை.

தவறுகளை அளவு மீறிச் செய்கிறான் தம்பி. விக்ரமர்க்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை. அம்பா! தினமுகிய அடியேன் உன் திருவடிகளை நம்பினேன். மோட்ச ஐஸ்வரிய முதல்வி! போக திருவளிக்கும் பூரணி! அன்பர்க்கு அகண்ட செல்வத்தை அளிப்பவளே! இது என்ன சோதனை? தம்பி மனம் ஏன் இப்படித் தடுமாறுகிறது? அவன் மனப் போக்கு, மாற அருளாயா என்று, சிந்திய கண்ணீருடன் சிந்தித்தார். ஒரு நாள் அன்பொடு தம்பியை அழைத்தார்.

சல்யாமிதா! ஊரில் குழப்பம் உச்ச நிலை பெற்றுளது. உன் உள் நோக்கம் தெரியவில்லை. கூச்சமே வேண்டாம். என்னிடம் சொல் நீ நினைப்பதை நானே நிறைவேற்றி வைக்கிறேன்!

அரி யிருக்க வேண்டிய பீடத்தில நரிபோல் இருக்கிறீர்! விரையில் இறங்கிவிடும்! இன்றேல், விறுவிறுத்து என் சொரூபம் வெளிப்படும்!

அருமைத் தம்பி! உன் நோக்கம் இப்போது தெரிகிறது. நல்ல ஆட்சியை நீயே நடத்து! நான் இங்கிருப்பதால், ஒருவேளை அதற்குத் தடை யாகலாம. இன்று இரவு, நான் ஊரை விட்டே போய் விடுகிறேன். ஆக்ரமிப்பை விடு! கனிவொடு குடிகளைக் கண்காணிக்க வேண்டும். இது எனது இறுதி உபதேசம்!

உபதேசம் போதும். நடைமுறைக்குத தக்கபடி நடக்க அறிவேன் என்று, வெடுக்கென்று எழுந்த சல்யாமிதன் விரைந்து நடந்தான்.

படர்ந்து இருள் எங்கும் பரவியது. இரவு மணி பன்னிரண்டு. அரசியின் அந்தப்புரத்தில் பிரவேசித்தார் அரசர். விழித்திருந்த மகாராணி, வினயமொடு எழுந்தாள்,

பிரமிளா! ஒரு செய்தி...

மடல் இலங்கு கமுகின் பலவின் மதுவிம்மும் வளிதாயம்
உடல் இலங்கும் உயிர் உள்ளளவும் தொழ உள்ளத் துயர்போமே.

அந்த செய்தியை அறிவேன். உடன் பிறந்தார் பகை; உள் நாட்டுக் கலகம்; வேதனையையே இரண்டும் விளைவிக்கும். இன்றிருப்பார் நாளை யில்லை. எட்டியும் போட்டியும் எதற்கு? பிறர் முனைப்பிற்கு எதிர்ப்பை எழுப்பல பிழை; தெய்வ இயற்கை தீர்ப் பளிக்கட்டும் என்று, அமைதி கருதிய நாம், எங்கேனும் போய் விடுவதுதான் அறம்.

கலகலவென்று கண்ணீர் சொரிந்தார் காவலர்.

ஏன் வருந்துகிறீர்கள்?

பிரமிளா! பதிவிரதைகள் சரிதை பல, ஏடுகளில் படித்திருக்கிறேன்; கறபிற் சிறந்தாளை, இன்று என் கண்ணெதிரில் காண்கிறேன் அகில உலகுமான ஆன்ம ரட்சகி, உன்னை எனக்கு அளித்ததை, உணர்ந்து மகிழுகிறது என் உள்ளம். நீ பூரண கர்ப்பிணி. நடக்க முடியாதே! செலலும் இடங்களில் சிரமந் தோன்றுமே என்று சிந்திக்கிறேன்!

ஓஹோஹோ! அரண்மனையில், இவளை விட்டு விட்டுப் போய் விடலாம் என்று நினைக்கிறீர்கள்! அது முடியாது. இருவரும் சேர்ந்து இருந்தால், இடர்ப்பாடுகள் தோன்ருது. தூய விமலை துணை புரிவள். எதிர்காலத்தை எண்ணி இரங்க, நமக்கு என்ன உரிமை இருக்கிறது? வாரும் இப்போதே புறப்படுவோம் என்று, அரசர் கைப் பிடித்தாள் அரசி.

நகைத்தார் நரபதி. புறப்பட்டனர். போகிருர்கள். போய்க் கொண்டே இருக்கிருர்கள். பொழுது விடிந்தது. எதிரில் ஒரு குக்கிராமம். அரசிக்குப் பிரசவ நோய் ஆரம்பித்தது. காதம் பல நடந்த அதிர்ச்சிதான் இதற்குக் காரணம். நேற்றுவரை இருவரும் சோழநாட்டு அரசர் அரசியர். இன்ரு, எந்த ஆபரணமும் இல்லை, மட்டரகமான ஆடை. பரதேசிக் கோலம். பார்த்தவர்கள் பலர் பரிதாபப் பட்டனர். அரச தம்பதிகள் என எவரும் அறிய முடியவில்லை. அரசியின் நிலையறிந்த ஒரு விவசாயி, இரக்கம் காட்டி, தன் குடிசையில் இருவரையும் சேர்த்தான்.

செய்த உபசரிப்பாலும், தேர்ந்த மருத்துவச்சியின் திறமையாலும், குறை ஒன்றும் இன்றி, ஆண் ஒன்று பெண் ஒன்ருக, பிள்ளைகள் இருவரை அரசி பெற்ருள்.

வாழ்ந்த குடியானவன் வற்புறுத்தலால், குடிசையில் ஒரு மாதம் இனிது உவந்து இருந்தனர். பக்குவமாகப் பல உரைத்தனர். விடை பெற்றனர். அரசர் ஒரு குழந்தை; அரசி ஒரு பிள்ளை; இப்படி ஏந்தினர். மனம் போன போக்கில் சென்றனர். இடை

எளியதாகி யுற ஓங்கியவன் வலிதாயம் தொழுதேத்த
உரியதாக உடையார் பெரியார் என உள்கும் உலகோரே.

வழியில் பழமோ காயோ பறித்தனர். பசியாறினர். இன்ப மாகப் போய்க் கொண்டே யிருக்கின்றனர்.

இடையிடை சத்திரம் சாவடிகளில தங்கினர். சிவபரம்பரை யைச் சிந்தித்தனர், பெரிதும் தேவி பிரதாபமே பேசினர். அதனால் அதிக சிரமம் தோன்றவில்லை. எதிரில் இருந்தது ஒரு காடு. குளு குளு என்று குளிர்ந்து, எங்கும் நிழல் பரப்பி, அமைதியைத் தரும் அந்த ஆரண்யம, காமக் கோட்டம் என்ற செய்தி காதில் விழுந் தது. அதைக் கேட்டதும், மகிழ்ந்தது தம்பதிகள் மனம்.

பிரமிளா! லலிதாம்பிகை, காமாட்சிப் பெயருடன் காமக்கோட் டத்தில் இருக்கிறாள என்பதை, அருள் நூல்கள் மூலம் அறிந்திருக் கிறேன். என்ன புண்ணியம் செய்தேனோ, அக் கோட்டத்தைச் சேவிக்கும் பேறு இன்று சித்தித்தது.

பிராணபதி! நானும் கேள்விப்பட் டிருக்கிறேன்! இங்கு பல அற் புதங்கள் இருக்கின்றதாமே!

மூன்று இடம்

ஆம். இது, பன்னிரு அற்புதம் படைத்த தலம் என்பர். எடுத்த சனனங்கள்தொறும் ஈன்றெடுத்து, கனிந்த தந்தையரைக் காட்டும் இடம் ஒன்று. அவ்வப் பிறப்பின் தாயரை, அறிய அறி விக்கும் ஓர் இடம். உற்ற உறவினரை உணர்த்தும் இடம் ஒன்று.

மூன்று மேடை

அன்னமும் நீரும் அளிக்கும் ஒருமேடை. தேடும் பொருளை, உவந்து உதவும் ஒரு திண்ணை. ஊமையைப் பேசவைக்கும் உயர் வேதிகை ஒன்று.

நான்கு அணை

கலைமகள் கணவரைக் காட்டும் அணை ஒன்று. நாரணரை அறிவிக்கும் நல்ல ஒரு பீடம். காலாக்னி உருத்திரரைக் காட்டும் ஒரு அரியணை. சூரிய மூர்த்தியை, சேவிக்கச் செய்யும் சிங்காத னம் ஒன்று.

ஐந்து தரு

மாபெரும் அமுது சிந்தும் ஒரு மாமரம். காண நிழல் காட் டாத காஞ்சி மரம் ஒன்று. பூவாமல் காய்க்கும் புளியமரம் ஒன்று. இனிய மலர் பலதரும் இலுப்பை மரம் ஒன்று. அருமையாகப் பொன் மலரும் அத்தி மரம் ஒன்று.

வாசி தீர அடியார்க்(கு) அருள் செய்து வளர்ந்தாள் வசிதாயம்
பேசும் ஆர்வம் உடையார் அடியார் எனப் பேணும் பெரியோரே.

ஐந்து குளம்

ஒவ்வொரு பொழுதில், மலரும் ஒரு மலர், காலையில் மலர்வது பொன்னிறம். உச்சியில் விரிவது வெண்ணிறம்; மாலையில் பூப்பது செந்நிறம். இப்படி, ஒரு கொடியில் மூன்று பூ உள்ள குளம் ஒன்று. மூழ்கினாரை வானரமா மாற்று குளம் ஒன்று. தன்னில் நீராடினோர், பகையைத் தவிர்க்கும ஒரு தடாகம். சுற்றம் சுகம் பெற, உதவும் ஒரு ஊருணி.

ஆறு பறவை

மழையை வருவிக்கும் ஒரு மயில். அருள் நூற்களை ஒரு கிளி அறிவிக்கும்; அரிய கணிதங்களை அறிந்துளது ஒரு ஆந்தை. புனித நூல் நுட்பம் புகலும் ஒரு புறா. இசை இலக்கணத்தை உணர்த்தும் இனிய ஒரு மைனா. சார்பறிந்து பொருள் உதவும் சக்ரவாகம் ஒன்று.

ஏழு பொது இடம்

உம்பர் மொழிகளை உணர்த்தும் இடம் ஒன்று. துறுதுறுத் தால் மதயானை, அதை முயல் துரத்தும் இடம் ஒன்று. தன் இடம் வந்தார்க்கு, திசைமயக்கம் செய்யும் தெய்வ இடம் ஒன்று. பாதலர் மொழி கேட்கவைத்துப் பயன் காட்டும் ஓர் இடம். நெய் இன்றி விளக்கெரியும் நியதியிடம் ஒன்று ஓயாது தேவ பறை கேட்கும் இடம் ஒன்று.

எட்டுப் பொய்கை

தன்னில் தோய்வார் மேனியை, பொன்னிறம் ஆக்கும் ஒரு பொய்கை. மாணிக்க நிறம் காட்டும் மலர்ப் பொய்கை ஒன்று. மரகத நிறம் அளிக்க மன்னு பொய்கை ஒன்று. இந்திர போக இன்பளிக்கும் ஒன்று. குபேர செல்வம் கூட்டுமொரு பொய்கை. தீரா நோய்களைத் தீர்க்குமொரு பொய்கை. மெய்ஞ் ஞானம் தன்னை மேவ வைக்கும் ஒன்று. பதமுதநிக் குரிய பரிசளிக்கும் ஒன்று.

ஒன்பது சிலைகள்

திண்டினரைத் தேவர் ஆக்கும் தெய்வச் சிலை ஒன்று. நீரா விடம் தீர்க்கும் தேவக்கல் ஒன்று. எண்வகைச் சித்திகளை இனி தளிக்கும் ஒன்று. இறந்தாரை எழுப்பி இன்பளிக்கும் ஒன்று. தீராத வழக்கைத் தீர்ததுவைக்கும் ஒன்று. கொடிய பிணி தீர்த்துக் குலவு சிலை ஒன்று. மாறுபட்ட உறுப்புக்களைச் சரிசெய்யும்

பையருகே அழல்வாயவை வாய்ப் பாம்பணையான் பணைத்தோளி பாகம் மெய்யருகே உடையானை உன்கி நின்றவர் ஏறுவர் மேலுலகே.

ஒன்று. பாவம் பல தீரப் பண்ணுமிலே ஒன்று. ஞானம் பாலிக்க நண்ணு சிலே ஒன்று.

பத்து சபை

ஊதாரிப் பாவிகளை ஊமையாக்கும் ஒன்று. களவர்களை மயக்கிக் கனிவுதரும் ஒன்று உரிய நூற்பொருளகளை உணர்த்து சபை ஒன்று. பலவடிவம் தந்து பயன்காட்டும் ஒரு சபை. இற வாமை காட்டி இன்புதரும் சபை ஒன்று. பிலத்துவாரம் காட்டும் பெரிய சபை ஒன்று. திசைமயக்கம் உண்டாக்கும் தீர சபை ஒன்று. பொன்னும் நவமணியும் பொழிகின்றது ஒரு சபை. இரவைப் பகலாக்கி, பகலை யிரவாக்கும் பழைய சபை ஒன்று. எதிர்செல்வார் தோன்றாமல் செய்கின்றது ஒரு சபை.

பதினோரு கிணறு

பால் கிணறு. தயிர்க் கிணறு. நெய்க் கிணறு. தேன் கிணறு. கருப்பஞ் சாற்றுக் கிணறு. முத்தி நிலம் காட்டும் முதல் கிணறு. சுவர்க்க இடம் காண்பிக்கும் சுகக் கிணறு. பதமுத்தி பார் என்னும் பயனுள கிணறு. கண்டார் நிழல் காட்டாத கவின் கிணறு. வித்தின்றி விளைவு செய்யும் வியன் கிணறு வந்தவ ரைத் திருப்பும் வன் கிணறு.

பிரமிளா! இப்படி அதிசயம் பலவுடைய அற்புத இடம் இது.

ஸ்வாமி! காண இவைகள் இன்று நமக்குக் காட்சி யாகுமா?

பிரமிளா! ஓயாத கர்மத்தால் உருளுகின்றோர் நாம். ஆசை படப்பட ஆகாமியம் பெருகும். ஆசையின் பெருக்கம், அதிக தரித்திரம். ஒட்டு பற்று இல்லாதார் இடத்தில், உருண்டு வரும் செல்வம், பாவமான நம்மைச் சூழ்ந்து, படரும் இருள படலம்.

ஜீவன் முத்தரும், சாமு சித்தரும் அவைகள் இருக்கும் இடம் அறிவர். உரிய காலத்தில், அவைகளைப் பயன்படுத்திக் கொளவர். அவர்கட்குத்தான் அவைகள்!

உமாதேவி சந்நிதியில் நாம் உழைப்போம் அம்பிகை சந்நிதி யில செய்யும் அரும்பணி, உரைதத அவைகள் யாவற்றினும் உயர் வுடையது. தெரிகிறதா? எதை எவர்க்கு அளிக்க வேண்டும் என்பதை, அன்னை அம்பிகை அறிவள்.

உணர்கிறேன் ஸ்வாமி! தங்கள் பயனுள கருத்தின்படியே பணி செய்வம் என்றாள் பிரமிளா.

உரைகளெல்லாம் உணர்வெய்தி நல்ல உத்தமராய் உயர்ந்தார் உலகில் அரவுமெல்லாம், அரையார்த்த செல்வர்க்(கு) ஆள்செய அல்லன்

(அறுக்கலாமே)

அம்பிகை சந்நிதி அருகில், ஒரு குடிலை அமைத்தனர். அத னுடன் ஒரு நந்தவனமும் அமைந்தது. மணம் கமழும் மலர் பறித் தனர். மாலை கட்டினர். சந்நிதியில் சமர்ப்பித்தனர்.

உணவிற்குச் சொல்ப முயற்சி. அடுத்து நந்தவன கைங்கர்யம். மற்ற நேரமெல்லாம் மந்திர ஜபம்; தேவி திருவடித் தியானம்.

விக்ரம சோழர் மகளும் மகனும், நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்தனர். மைந்தர் பெயர் சுகுணர். மகள் பெயர் மாதேவி. வளர் பிறை மதிபோல் வளர்ந்த அவள மேனி, பொன்னைப் பின்னிப் பொலிந்தது. தாய் தந்தையர், தக வொடு இருவரையும் தழுவினர். ஸ்ரீ காமாட்சியார் கண்ணருள், மன்னி இவர்களில் மலர்ந்தது.

* * *

பாண்டி நாட்டை ஆள்கின்றார் ஒரு பார்த்திபர். அவர் பெயர் குலசேகர பாண்டியர். அவர் தன் மைந்தனுக்கு மணம் செய்ய நினைத்தார். பல இடங்களில் பெண் தேடு படலம் ஆரம்பித் தது. ஒரு நாள், கனவில் அவர் முன் காமாட்சியார் காட்சியாயினர்.

பாண்டியா! கச்சிக் காம கோட்டத்தில, எமபால் அன்பன் ஒரு வன் இருக்கின்றான். அறிவிலாத் தம்பிக்கு அரசை அளித்து, மனை மக்களுடன், அங்கு வந்து என்னை பனனம் செய்கிறான். எமது அருளால் பிறந்த அவன் மகள, அறிவும் அழகும் சிறந்தவள். மங்கை அவளை நீ மணந்து கொள்! என்று மாதேவி அருளினள.

விழித்தார் பாண்டியர். வியப்பு அடைந்தார். ஸ்ரீ சாம்பவி கண்ணருள் சார்ந்த வேந்தர் சம்பந்தியாக, என்ன தவம் செய் ததோ இந்நாடு என்று, உணர்ந்து உள்ளம் உருகினார்.

பறை யறைந்து ஊருக்குச் செய்தியை உரைத்தார். பரிவாரம் தொடர புறப்பட்டார். உச்சியில் வைத்து மெச்சத் தக்க கச்சியை யடைந்த காவலர், அரசர் விக்ரமரைக் கண்டு அளவளாவினார். அம்பிகை தனக்கு கனவில் அருளியதும் கூறினார்.

விக்ரம தம்பதிகள், தேவி திருவருளை எண்ணி வியந்தனர். அன்பொடு தம்மை அர்ப்பணிப்பார்க்கு, காலத்தில், உவந்து முன் வந்து உதவுகிறாள் என்று, உணர்ந்து பூரித்தது உள்ளம். மன்னர் இருவரும், மாதேவியின் புனித சந்நிதியுள் புகுந்தனர். வந்தித்துத் தேவியை வாழ்த்தினர்.

* * *

கலைகள் நின்று அதிருங் கழலான் காதலிக்கப்படும் காட்டுப்பள்ளிச்
சொல்வல தொண்டர்கள் ஏத்த நின்ற சூலம் வல்லான் கழல்,
[சொல்லுவோமே.

சோழ நாட்டில் ஒரே குழப்பம். எங்கே விக்ரமர்? அரசி இருக்கும் இடமும் அறிய முடியவில்லையே என்று, தேம்பிக் குடிகள் திகைத்தனர் சால்பிலாத வஞ்சகன் சல்யாமிதன், அவர்களை என்ன செய்தானோ? என்று எண்ணும் போதெல்லாம் வயிறு குழம்பினர். எங்கும் திரண்டனர். எதிர்ப்பை எழுப்பினர். சேனாதிபதி சிதைந்தான். அநியாய அமைச்சர்கள், வெட்டுண்டு நிலத்தில் விழுந்தனர். சல்யாமிதன் தடுமாறினன் தலை தப்பினால் போதும் என்று, ஊரைவிட்டே ஓடினன், ஓடி எங்கெங்கோ ஒளித்தான். அலைந்து திரிந்தான். அவதி யடைந்தான். இறுதியில, அருந்தமிழ்ப் பாண்டி நாட்டில் அடைக்கலம் புகுந்தான். ஆதிமுதல் தான் செய்த தவறுகளை, ஒவ்வொன்றாக உணர்ந்தான். உள்ளம் உடைந்தான். பொருமி யழுது புலம்பினன். மதுரையில் ஒரு தேவி பக்தர். வாய்த்த அவரை ஒரு நாள் வணங்கினன்.

வா அப்பா! நீ எந்த ஊர்! என்ன முகம் வாடி யிருக்கிறதே?

ஸ்வாமி! என் வரலாறு மகா பாவமானது; என் தவறுகள் பொறுமல், தாய் தந்தையர் இடிந்த மனத்தால் இறந்தனர். என் தமயனர் விக்ரம சோழர், பொறுமைப் பூஷணம். பூத உடலில் இருந்து புகழுடல் பெற்றவர். பரம தேவி பக்தர். அவர் அருமை அறியாமல், ஐயோ! பாவி நான் அவர் மனம் புண்ணாகப் பண்ணினேன். மனம் வைத்திருந்தால், அவர் என்னைச் சிறையில் அடைத்திருக்கலாம்; தலையைச் சீவித தள்ளி யிருக்கலாம். ராஜ தர்மம் அதுதான். அவரோ, அரசர்களிற் பன்மடங்கு மேலான ராஜ ரிஷி; அறமன்னர். அனைத்தும் தேவி ஆடல் என்று அறிபவர். என் கோணல் மனம், அன்று அந்த அருமையை அறிந்திலது. விரட்டினேன் சண்டாளன் அந்த தர்ம மூர்த்தியை; நிறை கர்ப்பிணியான என் அண்ணியுடன், எங்கு சென்றாரோ? என்ன என்ன கஷ்டப் பட்டாரோ? ஸ்வாமி! ஐயோ! ஐயோ! நினைதாலும் என்னெஞ்சு வெடித்து விடும்போல் இருக்கிறதே என்று, குமுறிக் குமுறி அழுதான.

சல்லியமிதா! எல்லாம் தேவியாடல்தான்! விக்ரம சோழர் வேத நியதி உணர்ந்தவர். அன்று உன்னைத் தண்டித்திருந்தால், பகை உணர்வுதான் உன்னிடம் படர்ந்திருக்கும்.

அனுபவப் பட்டபின், இன்று பெருந் தெளிவு உன்னிடத்தில் பிறந்திருக்கிறது அல்லவா! இனி உனக்கும், உன் குடும்பத்திற்கும் அமைதி இயற்கையில் அமையும்!

பொடியணி மேனியினானை யுள்கிப், போதொடு நீர் சுமந்தேத்தி,
[முன்னின்று
அடிகையினுள் தொழுவல்ல தொண்டர் அருவினையைத் துரந்து ஆள்
[செய்வாரே.

அமைதியா? எனக்கா? என் தமயனூர் இருக்கும் இடம் அறிந்து, அவரையும் அண்ணியையும் சேவித்த பின் அல்லவா சித்ததில் சாந்தி...அதன்மேல் நாக்குழற, பேச முடியாமல், பொருமிக் கதறிப் புலம்பினன்.

பொறு! பொறு!! அமலை கனவில் அருளியபடி, மன்னர் விக்ரமர் மகளை மணம் பேச, நேற்றுதான், இந்நாட்டுக் காவலர் காமக் கோட்டம் சென்றுளர்.

அப்படியா! என் அண்ணு காமக் கோட்டத்திலா இருக்கிறார்? ஆஹா! கடைத்தேருத தூர்த்தன் என்று கலங்கினேன்; ஸ்வாமி! செல்கிறேன்; சென்று அண்ணி அண்ணியரைச் சேவிக்கிறேன்...

கருணகரீ! அபிராமீ! காமாட்சி! உன் பக்தரை நைய வைத்த நான் பாவி! பூமிக்குப் பாரம். தர்ம சொரூப என் அண்ணுவையும், அண்ணியையும் காண அருள்! அவர்களைச் சேவித்த பின், பொல்லாத என் உயிரைப் போக்குவேன்; அதன் பின் தாயே! என்னை நரகத்தில் இடு! நைய வை!! பல காலம் நரகத்தில் பதறச் செய்!!! தேவி! தேவ தேவீ என்று அலறினன்.

உணவை மறந்தவன்; பல நாள்களாக உறக்கம் துறந்தவன்; எலும்பும் தோலுமாக இளைத்த மேனியன்; கதறி யழுது அழுது பளளம் பட்ட கண்ணினன். அண்ணு! அண்ணீ என்று ஓயாது ஓதும் வாயினன். விழுந்து எழுந்து நடந்து ஓடி, பித்துப் பிடிதத வன் போல், போய்க் கொண்டே யிருக்கிருன். நடந்தவன், பல நாள் நடந்தபடியே இருந்தான்.

அரிய காமக் கோட்டக் காட்டை யடைந்தான். பாண்டி நாட்டு மக்களை அங்குப் பார்த்தான். அவர்களைக் கண்டதில் ஒரு ஆறுதல். கூட்டத்தை ஊடுருவினுன். உள் நுழைந்தான். ஸ்ரீ காமாட்சி கோயில் வாயிலில், கண் பெற்ற பயன் போல், விக்ரம சோழரைத் தேவியுடன் கண்டான்.

அண்ணு! காமாட்சி யருள் பெற்ற அண்ணீ! அண்ணு அ அ அ! என்று அலறியபடியே, தலைவிரி கோலமாக ஓடி வந்தான்.

அழுத கண்ணீர் அருவியெனப் பெருக, எலும்பும் தோலுமாக இளைத்த தம்பியை, கண்ட விக்ரம தம்பதிகள் கலங்கினர். எதிர் கொண்டு ஓடினர்.

அண்ணு! அண்ணீ! பாவி நான்! சகோதரத் துரோகி நான்! உங்கள் உடன் பிறந்தவன் என்று என்னைக் கூட யோக்யதை யில்லாதவன் என்று, அடியற்ற மரம்போல், இருவர் பாதங்களில்

உற்றவர்தாம் உணர்வெய்தி நல்ல உம்பருள்ளார் தொழுதேத்த நின்ற
பெற்றமரும் பெருமானை யல்லால் பேசுவது மற்றோர் பேச்சிலோமே

வீழ்ந்து பணிந்தான். அழுத கண்ணீரால், அவர்கள் திருவடிகளை அலம்பினான்.

வாரியெடுத்த விக்ரமர், தம்பியை மார்பிறுகத் தழுவினர்.

தன் குற்றததால், விளைந்த ஒவ்வொன்றையும் விரித்து, விசித்து விசித்து அழுதான்.

அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, அரசரும் அரசியும் கண்ணீர் சிந்தினர்.

தம்பி! வருந்தாதே. பிரித்தது விதி; தேவி திருவுளம் மீட்டும் பிணைத்தது என்று, ஆறுதல் மொழிகள் ஆயிரம் கூறினர்.

மன்னர் பாண்டியர, இரு சகோதரர்களும் ஒன்று பட்டதை எண்ணி, உள்ளம் பூரித்தார். அரசர்கள இருவரும், சோழ நாட்டையடைந்தனா. விக்ரமரை வற்புறுத்தி மணிமுடி சூட்டினர். பாண்டியர் புதல்வர்க்கும், சோழர் மகட்கும் நன்மணம சிறக்க நடந்தது. நாள சில இடையில் நடந்தன. பட்டம் கட்டிக்கொள் என்ற, விக்ரமர் எவ்வளவோ வேண்டியும் கேளாமல், தம்பி துறவு தாங்கினன். அதன்பின் விக்ரமர், அரிய தன் மைநதனிடம் ஆட்சியை ஒப்படைத்தார்.

தெய்வக் காஞ்சிக்கே திரும்பினர். அன்று காடாயிருந்த அந்த இடத்தை, காடு கெடுத்து நாடாக்கினர். ஆலய ஜீர்ணோத் தாரணம் செய்தார். குணம் சிறந்தார் பலரைக் குடியேற்றினர். பெரிதும் தேவி திருப்பணியைப் பெருக்கினா. ஒரு நாள், தேவி திருமேனியில், மின்னிப் பேரொளி மிளிர்ந்தது.

அம்பா! மதிமயக்கும் உன் மாபெரும் ஆடலை, அளவிட வல்லவன் அடியேனோ தாயே! தியான சொருப சகுணையே! பார்வதீ! சந்த்யாதேவி! சாவித்ரீ! காயத்ரீ! புவனேஸ்வரீ! மஹாமாயீ! என்று ஏத்திப் போற்றித் தேவியுடன் அங்கேயே சிலநாள் இருந்தார்.

தற்பரியின் தண்ணருள் ஒளி, ஒரு நாள் தாவி இருவரையும் தழுவியது. வாழப் பிறந்த தம்பதிகள், வாமையின் திருவருள் நிழலில, அன்று கலந்து இன்பம் கண்டனர்.

வாழ்க தேவி தாஸர்கள்!

சேறும் சயமும் நினைத்த கண்ணூர் சீர்கொள் செங்காட்டங் [குடியதனுள்
சூலம் வல்லான் கழல்ஏத்து பாடல், சொல்ல வல்லார் வினை யில்லையாமே

அன்பெனும் செல்வம்

(ஸ்ரீமதி சிவானந்த விஜயலக்ஷ்மி)

[சென்றமுறை பண்பெனும் பயனைப்பற்றி ஆராய்ந்தோம். இனி பண்பு நிறைநத பெருமகன் பெறும் செல்வம் யாதென கண்டு காண்போம்.]

அன்பு—இது ஓர் அதிசய மலர். உள்ளத்தில் மலரும் வாடாமலர். இம்மலர்ச் செடிக்கு வித்து பண்பு. இலைகள் சேவை. மலர் அன்பு. இது மலர்வது ஆண்டவன் எனும் அருட் கிரணங்க ளமைந்துள்ள தோன்றி மறையாச் சூரியன் முன்பு ஆகும். இது மலர்ந்தால் இதன் மணம் எங்கனும் வியாபிக்கிறது. நாடு, நிறம், மொழி போன்ற எவ்வித வேற்றுமையுமின்றி, கடல் மலை போன்ற தடைகளுக்கும் புறம்பாய்ச் சென்று உலகம் எங்கும் வியாபிக்கிறது. இது, தான் மணப்பதன்றி தன்னை அண்டினவரையும் மணங் கமழச் செய்யும் அதிசய மலர்! இம் மலர் நம் மனத்திலும் மலர வேண்டாமா!

அன்பு—இது ஓர் இனிமையான தேன், ஆம்-தெவிட்டாத தெளிந்த தேன். கலப்படமற்ற சுத்தமான தேன். வாழ்க்கையெனும் மலருக்கு இதுவே தேனாகிறது. தேனில்லாத மலர் வண்டுகளுக்கு இன்பம் பயவாததுபோல, அன்பு இல்லாத வாழ்க்கை எவருக்கும் இன்பம் தராது! ஆம்-அன்பற்ற மனிதரை யாரேனும் நாடுவரா? சுற்றத்தவரும் நாடமாட்டாரே-மனிதப் பிறவி கொண்ட அனைவர்க்கும் இத்தேன் அகத்தில் ஊறியாக வேண்டும். ஆனால் ஓர் அதிசயம். அன்பு செய்யாத மனிதனை உலகில் காண முடியாது. அவனிடம் இருப்பது எத்தகைய அன்பு என்பது பற்றிக் கேள்வி இல்லை. ஆனால் அன்பு செய்யாது எந்த மனிதனும் உயிர் வாழ முடியாது.

அன்பு-இது நமது மூச்சு, இம் மூச்சு இல்லாத மனிதன் நடைப்பிணத்திற்கு ஒப்பாவான்; ஆம். எலும்பும் தோலும் போர்த்த புறஉடலில் அன்பு எனும் மூச்சு இயங்காவிடில்,

---

விண்ணுயர் மாளிகை மாடவீதி விரைகமழ் சோலை சுனைவி எங்கும் பண்ணியல் பாடல் அறாத ஆரூர்ப் பசுபதி யீச்சரம் பாடும் நாவே.

வாழ்க்கையில் சுவை உண்டா? 'கல்லெனும் நெஞ்சம்' கொண்டவன் எனும் பெயர்பெற்ற மனிதன்கூட தனது நெஞ்சத்தில் ஒருபகுதி கனிவாய் இருப்பதை உணர்ந் திருப்பான். பிறர் கண்டு அஞ்சும் தன்மை படைத்த கொலைஞனும்கூட தன் நெஞ்சத்தில் ஏதோ ஒரு பொருளை வைத்து அன்பு செலுத்தாமல் இருப்பதில்லை. இந்த மூச்சு மனித இனத்தில் மாத்திரம்தானு இயங்குகிறது? இல்லை. இது விலங்கு இனத்தைக் கூட வியாபித்திருக்கிறது. கண்ட வர் அஞ்சும் காட்டு அரசனும் சிங்கம், தனது குட்டியை அன்புடன் அணைத்துக் கொள்ளும் காட்சியை (மிருகக் காட்சி சாலையில்) கண்டு நான் வியந்ததுண்டு. அன்பு இல் லாத இடம் அவனியில் இல்லையன்றோ!

அன்பு-இது ஒரு பேறு, பெரும் பேறு! எல்லோராலும் பூரணமாக அன்பு செலுத்த முடியாது! வறண்ட வாழ்க் கையை இன்பப் பூஞ்சோலை யாக்குவதற்கு ஆண்டவன் நமக்களித்த வரப்பிரசாதமல்லவா அன்பு! பசி,பிணி, கவலை, கஷ்டம் அனைத்தையும் மறக்கச் செய்யும் இப்பெரும் பேறு இல்லாத நெஞ்சம் கற்பாறையே.

அன்பு-இது ஓர் ஒப்பற்ற மருந்து! ஆண்டவன் எனும் மருத்தீச்சுவரர், வைத்தியநாதன் தந்த நல்ல மருந்து; சுகம் நல்கும் மருந்து; அன்பு உருவாய் அமைந்த மருந்து; இது துன்பம் ஒழித்து இன்பம் பயக்கும். கவலை ஒழித்துக் களிப் புத் தரும். வேதனை மாற்றி வெற்றி தரும். பிணியைப் போக்கி பேரின்பம் அருளும். வேறுபட்ட நெஞ்சங்களைப் பிணைக்கும். மாறுபட்ட கருத்துக்களை ஒன்று கூட்டும். பொதுவாக இம்மருந்து, உலகிலுள்ள எல்லா வியாதிகளுக் கும் ஏற்ற மருந்து. இம்மருந்து உடல் நோயினைக் களைவ தோடு, மாறாத் துன்பமான பிறப்பிறப்பு எனும் பெருந் துயரையும் நீக்கி இறவா இன்பம் தரும். இம்மருந்தினைத் தரும் மருத்தீச்சுவரனை வழிபட்டு, இது நம் கைவரும் நாளே நன்னாளாகும்!

அன்பு-இது சங்கநாதம். ஆண்டவனின் அருட் சங்க நாதம். அமைதியை நிலவச் செய்யும் சங்கு நாதம். கலகம்,

---

தொத்தியலும் பொழில் மாடு வண்டு துதைந்தெங்கும் தூமதுப் பாயக் [கோயில்

பத்திமைப் பாடல் அறாத ஆரூர்ப் பசுபதி யீச்சுரம் பாடும் நாவே.

குழப்பம், போர், பீரங்கி, ஆயுதம், அணுகுண்டு என்றெல்லாம் பேசும் நமது கூக்குரலை அடக்கும் சங்கு நாதம்; ஆயுத சக்தியை அமைதியோடு அழிக்கக்கூடிய சங்குநாதம். ஒற்றுமை, உடன்படிக்கை இவற்றால் இந்நாதத்தைத் தோற்றுவிக்க முடியாது. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இந்நாதம் முழங்கினால்தான் உலகம் எங்கும் இந்நாதம் ஓங்க முடியும். அகத்தில் அன்பு ஒலி பெருக்கினால் புறத்திலும் இவ்வொலி, மிகுந்து உலகம் எங்கும் வியாபித்து, மாற்று சக்திகள் அனைத்தையும் விழுங்கி, எல்லோருக்கும் இன்பம் பயத்தல் கூடும்

அன்பு-இது ஓர் அதிசய மாத்திரை-ஆம் வைடமின் அ மாத்திரை. ஆனால் இதை எந்த சோதனைச் சாலையிலும் கண்டுபிடிக்க முடியாது. எந்த மருத்துவரும் கண்டுபிடிக்க வில்லை! இது ஓர் விந்தைதானே. இது அகத்தில் வலுவிழந்து நிற்கும் அற்ப மனிதர்களைத் திர புருஷர்களாக்குகிறது. விலை என்ன என்று கேட்கிறீர்கள்? இதற்கு விலை நாமேதான்! நம்மை அதற்குத் தந்தால் அது தன்னை நமக்குத் தரும்! இம்மருந்தினை உட்கொண்டால் தனி மனிதன், குறைபாடுகள் நிறைந்த மனிதன், பூரண மனிதன் ஆகிறான். எனவே சமூகமும், பூரண மனிதர்களைக் கொண்ட பூரண சமூகம் ஆகிறது. பூரண மனிதர்களைக் கொண்ட, பூரண சமூகம் படைத்த நாடும் பூரண நாடு ஆகிறது. அந்நாட்டின் 'அக' பலத்தினால் அண்டை அயல் நாடுகளும் பூரணமடைதல் கூடும். எனவே தனி மனிதன்-முதற்கண் தன்னைப் பூரண மனிதன் ஆக்க முயல்வானாக.

அன்பு—இது ஓர் நீரோட்டம்-ஆம். மலையுச்சியி லிருந்து விழும் நதியின் வேகம் போல இதன் வேகமும் உள்ளது. இதனுள் வந்து கலக்கும் பொருள் எதுவாக இருப்பினும், அது தனது நிறத்தையும் பெயரையும் இழந்து 'அன்பு' எனும் பெயரினைப் பெற்று விடுகிறது. நதி பிறருக்கு நன்மை பயப்பதையே தனது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது போல, அன்பும் உலகுக்கு இன்பம் தருவதையே தனது இணையிலாக் கடமையாக இயற்றி வருகிறது.

தெங்குயர் சோலைசேர் ஆலைசாலி திளைக்கும் விளைவயல் சேரும் [பொய்கைப்
பங்கய மங்கை விரும்பும் ஆரூர்ப் பசுபதி யீச்சரம் பாடும் நாவே.

நீரிற்கு அடைக்குந்தாழ் இல்லாதது போல அன்பும் அடைக்குந் தாழ் இன்றி அவனியெங்கும் பாய்கிறது. எங்கணும் பரவுகிறது. நதியின் நீர் வளம் தருவதுபோல, அன்பு நீர் நெஞ்சத்தை வளமாக்குகிறது. உயர்ந்த மலையிலிருந்து உருண்டோடி வரும் நதி, மேடு பள்ளங்களை நிரப்பி அனைத்தையும் சம வெளியாக்கி விடுவது போல, அன்பிற் சிறந்த பெரியோரிடத்திலிருந்து பெருகும் அன்பு வெள்ளம், ஏழை, பணக்காரர், நல்லார், பொல்லார், கற்றார், கல்லாதார் என்ற எவ்விதப் பாகுபாடுமின்றி அனைவருக்கும் இன்பம் பயப்பதாக அமைகிறது.

அன்பு-இது ஓர் உரம். ஆம். வாழ்க்கைப் பயிர் வளம் பெற்று, செழித்து, பயன் கொழித்திடச் செய்யும் உத்தமமான உரம். இது எங்கு தயாராகிறது? என்ன முறையில் தயாரிக்கப் படுகிறது? நெஞ்சத்தில் தயாராகிறது. பக்குவப் படுத்தும் முறையில் தயாரிக்கப் படுகிறது. பிறக்கும் பொழுது அன்பு செய்யப் பழகிக் கொள்ளும் மனிதன், பல பொருள்களிடத்து அன்பு செலுத்தினான். அவற்றில் மண், பொன், பெண் இவையே முக்கியமாகின்றன. இவற்றில் அவன் கொள்ளும் காமமும், வைக்கும் மோகமும், இவனது வாழ்க்கைச் செடியை நாசம் செய்யும் நச்சுப் பயிர்களாகின்றன. இவன் பொருள்களிடத்து கொள்ளும் அன்பு, இவனது வாழ்க்கைப் பயனான வீடு பேற்றினைப் பெற விடாத களைகளாக அமைகின்றன. எனவே அக்களைகளையும், துளைகளையும், வலைகளையும் மாற்ற, இவன் அன்பெனும் உரத்தினை உபயோகித்தே தீரவேண்டும். உலகில் நடைமுறையில், 'அன்பு'க்குக் கொடுக்கப்படும் பொருள் அல்லது விளக்கம், மிக ஆபத்தாக முடிகிறது. உலக அன்பெல்லாம் காமமும் மோஹமுமே யாகும். ஆண்டவன் அல்லது பரம்பொருள் பால் செலுத்தப்படும் அன்பு பிரேமை அல்லது பக்தியாகும். அத்தகைய அன்பே நம் வாழ்க்கைச் செடிக்கு வளமளிக்க வல்ல உரமாகும். இவ்வுரமிட்டு நற்பயிரை வளர்த்து நற்பயன் பெறுவோமாக! காமமெல்லாம் சிவ காமமாக, மோஹமெல்லாம் பரமோஹ

கண்டவர் சிந்தைக் கருத்தின் மிக்கார் கதியருளென்று கையாரக் [கூப்பிப்
பண்டவர் கொண்டு பயிலும் ஆவூர்ப் பசுபதி யீச்சரம் பாடும் நாவே.

மாக்கி வாழ முயலுவோம். இத்தகைய அன்புதானே நிலையான உண்மையன்பு?

அன்பு-இது ஓர் ஜோதியாகும். இருண்ட வாழ்க்கையில், கோபமும் தாபமும், இடி ஓசை மிகுந்து, ஆசாபாசங்களாம் அடை மழை பெய்து, அறிவு எனும் கண்ணை மறைத்து. நாம் கலங்கி நிற்கும் காலத்தில் நமக்கு நல்வழி காட்ட வரும் ஒப்பற்ற திருவிளக்கு. இது கைம்மாறு கருதாத, தன்னலம் கருதாத திருவிளக்கு. இது, தான் மாத்திரம் ஒளிமிகுந்து இருப்பதில்லை, தன்னை அண்டினவர்க்கும் ஒளி கொடுக்கிறது. அதே சமயத்தில் இதன் ஒளியும் குன்றுவதில்லை. இவ்வொளி காட்டும் பாதையில் செல்பவர், சத்தியமும் கடமையும், நேர்மையும் நியதியும் நிறைந்த தர்ம மார்க்கத்தில் செல்வார்கள். அன்பு வழியே இன்ப வழியன்றோ?

அன்பு-இது ஓர் வேள்வித்தீ! ஆம்-நம்மையே விழுங்கி 'நாம்' ஆகச் செய்யும் வேள்வித் தீ. இத்தீயின் முன்பு நிற்பவர், தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இதனுள் இட்டு இன்பம் காண்பர். தமக்கு என்று தனி வாழ்வை நாடாது, இதனுள் தமது அனைத்தையும் அர்ப்பணித்து ஆனந்தம் அடையச் சொல்லும் அதிசய வேள்வித் தீ. இதன் திருமுன் தம்மை அர்ப்பணித்தவர், ஆண்டவன் தம்மை ஆட்டுவித்தால் ஆடி, பாட்டுவித்தால் பாடி, கூட்டுவித்தால் கூடி, குழைவித்தால் குழைந்து, ஊட்டுவித்தால் உண்டு, உறக்குவித்தால் உறங்கி, ஓட்டுவித்தால் ஓடி, வேறொரு நாட்டமின்றி வாழ்வார்கள். அன்பு வேள்வியில் தம்மையே ஆகுதியாக்கிய அப்பெரியோர்கள், ஆண்டவனுக்குத் தமது மனதைத் தந்து, அவனது அன்பனுகி அவனிடத்து வேண்டி, யாசித்து அவனைப் பணிந்து, வணங்கி, அவனுக்காக-அவனையே பிரார்த்தித்து வாழ்வார்கள். இத்தகைய இணையிலா அன்பர்களை எப்போதும் காப்பதாக ஆண்டவன் கூறியுள்ளதில் வியப்பு என்ன? "மன்மனபவ-மத்பக்தோ-மத்யாஜீ-மாம் நமஸ்குரு-மாமேவைஷ்யஸி-ஸத்யந்தே-ப்ரதிஜானே-ப்ரியோஸிமே" என்பது தானே கண்ணனின் கனிந்தமொழி!

மன்னுார்ந்த அருவித்திரள் மழலைம் முழவு அதிரும்
அன்றுமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே.

அன்பு-இது ஒரு கண்ணாடி; வர்ணக் கண்ணாடி. இதனை அணிந்து கொள்பவன் காண்பதனைத்தையும் அன்பு மயமாகக் காண்கிறான். எனவே எதனைக் கண்டாலும் அவன் அஞ்சுவதில்லை. யாவரும் கண்டு அஞ்சும் மரணம் கூட அவனுக்கு பயங்கரமாகத் தென்படுவதில்லை. யான் ஏதும் பிறப்பஞ்சேன் என்று மார் தட்டும் அம் மஹா புருஷன், இன்னும் பிறவி வந்தாலும் பயப்படுவதில்லை என்று,தைரியமாய்க் கூறும் இவ்வன்பு வடிவினன் இறப்பதனுக்கு என் கடவேன் என்று தனது அஞ்சா நெஞ்சத்தை விளக்குகிறான். அவனுக்குக் காண்பதனைத்தும் கடவுள் மயமாகக் காட்சி தருகிறது. அன்பு இறைவன் வடிவம் தானல்லவா! எனவே அனைத்தையும் அன்பு மயமாய், ஆண்டவனின் வடிவாய்க் காணும் அன்பன் எதனைக் கண்டு அஞ்ச வேண்டும்? அச்சமில்லை - அச்சமில்லை - அச்சம் என்பதே அவனுக்கில்லை. அவனுக்கு இன்பமே எந்நாளும் துன்பமில்லை. உலக மக்கள் துவேஷம், பொறாமை, வேற்றுமை எனும் கண்ணாடி தரித்துக் காண்பதால், உலகத்தில் உள்ள அனைவரும் அவர்களுக்கு வேற்றாராய், மாற்றாராய்த் தென்படுகின்றனர். ஏன், உடன்பிறந்த சகோதரன் கூட 'தாயாதி' என்றல்லவா தனித்து வைக்கப்படுகிறான். ஆனால் அன்பெனும் கண்ணாடி தரித்த அருளாளர்கள், எல்லோரையும் தமது உற்றாராகக் காண்கிறார். அவர் கண்களுக்கு எல்லாம் நல்லதாக, அனைவரும் நல்லோராகத் தென்படுகிறது. காணும் காட்சியா லல்லவா கருத்திலே களங்கம் ஏற்படுகிறது! காணும் காட்சியை மாற்றும் இவ்வன்புக் கண்ணாடியை அவனியில் உள்ளவர் அனைவரும் தரித்துக் கொண்டால், அமைதி இன்மைக்கும், அறியாமைப் பேய்க்கும், பொறாமைப் போருக்கும், அணுகுண்டு ஆராய்ச்சிக்கும், அமைதி மகா நாடுகளுக்கும் இடம் தானுண்டோ? சற்றே சிந்தியுங்கள்.

அன்பு என்பது யாது? அன்பர்கள் யார்? இது நிரந்தரமானதொரு கேள்வி. அழியாத அமரப் பொருளிடத்துக் காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி,அதனைப் பெறக் கருதித் தவிப்பது அன்பனின் இலக்ஷணம். நிரந்தரமானதும் நித்திய

ஆமாம்பீனை அனையும் பொழில் அண்ணமலை அண்ணல்
பூமாங் கழல் புனைசேவடி நினைவார் வினையிலரே.

மானதுமான பரம்பொருளை நேசிப்பதே உண்மை அன்பு உலகில் இன்று அன்பு எனும் பெயரில் உடல் அன்புதான் நடமாடுகிறது. இத்தகைய அன்புக்குள் உடற்குப் புறம்பான என்பொருள் பிடிபடுமா? உடலழகை அநுபவிக்கும் அன்பு, அவ்வழகு அம்மையால், அல்லது இதர நோய்களால் மாசுபட்டு விட்டால் வெறுப்பாகவும் மாறிவிடுமல்லவா. உடல் அன்பு மின்னல்போல் தோன்றி மறைவது. இறையன்பு என்றும் மாறாதது. பாலும் நீரும் கலப்பது போல அன்பனும் ஆண்டவனும் இவ்வன்பில் கலந்து வருகின்றனர். கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போல, சிறந்த அடியார் சிந்தனையுள் அன்பெனும் தேன் ஊறி நிற்கும். அத்தேனினை ஆண்டவன் பருகுகிறான். அத்தேன் பருகும் காலத்தில் அண்ட சராசரத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் பருகுகின்றன.

உண்மை அன்பன் யார்? இறைவடிவத்தை எங்கும் கண்டு, அவற்றின்பால் இடையறா அன்பு செலுத்துபவன். அவன் தனது உடல்பொருள் ஆவி அனைத்தையும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்துள்ளதால், அவ்விறைவனின் வடிவங்களான ஜீவராசிகளுக்குத் தனது மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும் பெருந் தொண்டு புரிவான். இத்தகைய செய்கை பெரும் வேள்விகளைக் காட்டிலும் மிகச் சிறந்தது அல்லவா. அன்பனின் நல் எண்ணத்தால், இன்முகத்தால், இனிய சொல்லால், நற்செய்கையால் எத்தனை உயிர்கள் இன்பம் அடைகின்றன! அவைகளின் இன்பத்தைக் கண்டு அன்பன் களிப்படைகிறான். அக்களிப்பில் தெய்வ ஆனந்தம் பரிமளிக்கிறது. இவ்வேள்வியில் அன்பிற் சிறந்த அப்பெரியான் தன்னையே ஆகுதியாக்குகிறான். தனது எலும்பையும் அன்பு செய்வதில் தேய்த்து ஓடாக்குகிறான் என்னில் அது மிகையாகுமா.

அன்பு-இது எதனாலும் மாறாத, இறவாத, இதய பூர்வமான அன்பாய் இருக்க வேண்டும். பயனைக் கருதி ஆண்டவனிடம் அன்பு கொள்வது, உடலழகைக் கண்டு அன்பு செலுத்துவது ஒக்கும். உடலழகு மறைந்தால் மன அன்பு மாறுவது போல, கேட்ட பலன் கிட்டாவிடில்

கருகும் மிடறுடையார் கமழ் சடையார் கழல்பரவி
உருகும் மனம் உடையார் தமக்கு உறுநோய் அடையாவே.

பக்தியும் குறைந்துவிடும். எனவே, பலனை எதிர்பாராது அன்புக்காகச் செலுத்தும் தன்மை (Love for loves sake) நமக்கு ஏற்படவேண்டும். தாய்ப் பசுவின் வரவுக்காக ஏங்கிக் கன்று கதறுவதுபோல, நம் அன்புப் பயிர் தழைக்க ஆண்டவனின் அருள் மழைக்கு ஆசைப்பட வேண்டும். வேற்று நாடு சென்ற அன்புக் கணவன் விரைவில் வீடு திரும்புவதை விரும்பும் நல்மகள் போல, நம் அகக் கண்ணுக்கு மறைந்து விளங்கும் பிராணநாதன் வெளிப்பட விண்ணப்பிக்க வேண்டும். இதுவே உண்மை அன்பின் செயலாகின்றன.

அன்பு, தெய்விக அன்பு, நமது நெஞ்சத்தைப் பரிசுத்தப்படுத்துகிறது. நற்குணங்களைக் கூட்டுகிறது. பண்பு பரிணமிக்கச் செய்கிறது. நமது எண்ணத்தில் வலிவையும், செய்கையில் தேர்ச்சியையும் கொடுத்து, நமது ஒவ்வொரு அடியிலும் நல்லதொரு லக்ஷியத்தை அடையச் செய்யும் வழி கோலுகிறது. ஆண்டவனை உண்மையாக, இதய பூர்வமாக, பிரியாத நேசத்துடன் வழிபடுவது மனித இனத்திற்கு மாத்திரம் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம். மனித சமுதாயத்திற்கு இஃது உயர்ந்த பரிபக்குவத்தைத் தருகிறது. ஆத்ம தத்துவத்தை அதிவிரைவில் அறிய வழிகாட்டுகிறது. கடமைக்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்ட பெரு வாழ்வைத் தருகிறது. ஆண்டவனை அன்பு செய்வதற்கு அளவு எத்தனை என்றால், அவனை அளவு கடந்து அன்பு செய்வதே என்று தான் பதிலளிக்க முடியும். இத்தகைய தெய்வீக அன்பு எனும் மணம் மிகுந்த மலர், மொட்டாக இருக்கையில் இக இன்பத்தையும், மலராகப் பரிணமித்தால், இறவாத இறை இன்பமெனும் மோக்ஷத்தையும் தருகிறது.

அன்பு-இது அழியாத செல்வம். நெஞ்சம் எனும் அறையுள் வைத்துப் பூட்டப்படும் இச்செல்வத்திற்குத் திருடர்கள் பயமில்லை. மதிப்பு மாற்றத்தால் பெருமை குறையுமோ எனும் கவலையுமில்லை. வேற்று நாடுகளுக்கென மாற்றம் செய்ய வேண்டிய அவசியமுமில்லை. எங்கணும் இது ஏக போகமாக உதவுகிறது. அபாயம் விளை

ஆரம்பர்தம் உரைகொள்ளன்மின் அன்றுமைக்கு அருளன்னல்
கூர்வெண் மழுப்படையான் நல்ல கழல் சேர்வது குணமே

விக்காத, அமைதி விளைவிக்கும். சாந்திக்கும் சௌபாக்யத்திற்கும் வழிகொடுக்கும் இவ்வன்புச் செல்வத்தைத் திரட்ட ஜகத்திலுள்ள அனைவரும் சேர்ந்து வருவோமாக. அன்பு உண்மை, வேற்றுமை எனும் கொடும் பிணியை மாற்றும். இப் பெருஞ் செல்வத்தைப் பெருவாரியாய் திரட்ட பெருத்த பாருளீர், நீங்கள் வாருமே என வேண்டுகின்றனர் பெருமக்கள்!

வாழ்க இன்ப அன்பு!

கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

6. ஞானமும் கர்மமும்.—

அர்ஜுனனுக்கு ஒரு பெருத்த குழப்பம் ஏற்படுகிறது. ஞானம் ஒன்றுதான் அடையப்பட வேண்டியது என்பதைப் பகவான் விளக்கிக் கூறிவிட்டார். அப்படியிருந்தும் யுத்தம் செய்வதாகிய கொடிய கருமத்தில் தன்னை ஏன் கண்ணன் ஈடுபடுத்த வேண்டும் என்று கலங்குகிறான். இந்தக் குழப்பத்தைப் பகவான் தீர்த்து வைக்கிறார்.

கருமம் என்ற வார்த்தைக்குச் செயல் புரிவது என்ற அர்த்தம் தான் பொதுவாகக் கொள்ளப்படுகிறது. இந்திரியங்கள் தொழில் படும் போது ஏற்படும் வெளிப்பாடுகள் தான் மனிதனுடைய புறச் செயல்களாக மலர்கின்றன.

கருவி கரணாதிகளை உபயோகித்துச் செயல் படுவது ஒரு முறை. சிந்தனை, ஆராய்ச்சி, எண்ணங்கள், தியானம் இவற்றின் மூலம் மௌனமாகச் செயல் படுவது மற்றொரு முறை. எனவே மனிதன் புறச் செயல், அகச் செயல் இரண்டும் புரிகிறான். இரண்டாலும் பாதிக்கப் படுகிறான். அகம், புறம் இவ்விரண்டில் ஏதாவது ஒன்றால் அவன் செயல் பட்டுத்தான் ஆக வேண்டும். செயலின்றி சும்மா யிருக்க முடியாது.

சாவாதவர் பிறவாதவர் தவமே மிகவுடையார்
மூவாதபல் முனிவர் தொழும் மூதூர் குன்று உடையோமே.

உலகத்தாரின் கண்களுக்குச் சோம்பேறியாகக் காணப்படுகிற ஒருவன் உண்மையில் நல்ல உழைப்பாளி யாகவும் இருக்கலாம். உழைப்பாளி என்று சாதாரண மக்களால் கருதப்படுகிற ஒருவன் வாஸ்தவத்தில் சோம் பேறியாகவும் இருக்கலாம். கருமங்களைச் செய்யாததால் ஒருவன் அதை விட்டு விட்டானென்று கூறிவிட முடியாது. கருமம் செய்வதால் மட்டும் ஒருவனை கர்மத்தில் ஆழ்ந்து விட்டானென்று சொல்லிவிடவும் முடியாது. செயல் தான் கருமத்தின் வெளிப்பாடு என்று மதிப்பிடுவது தவறு.

ஞானமார்க்கத்தைப் பெறுவதற்கு கருமத்தை விட வேண்டிய அவசியமில்லை என்று பகவான் கூறுகிறார். சரி யான செயல் புரிவது செயலற்ற நிலைமைக்குச் சமமானதுதான் என்று பார்த்தனுக்கு விளக்குகிறார். ஞானி செய்யும் கரு மங்கள் அனைத்தும் ஞான கர்மமேயாகும் என்று தெளிவு படுத்துகிறார்.

ஞானியானாலும் சரி—சாதாரண மனிதனானாலும் சரி-ஒரு நிமிஷம் கூட செயல் படாமல் இருக்க முடியாது. ஆனால் இருவர் செயல்படும் முறையிலும், செயலுக்கு அடிப்படை யான நோக்கத்திலும் வித்தியாசம் உண்டு. ஞானி செய்ய வேண்டியவற்றை மட்டுமே செய்கிறான். அவனுடைய செய லுக்கு அர்த்தமும் பயனு முண்டு. பாமரனை செயல் ஆட் கொள்கிறது. ஞானியோ செயலை ஆட்கொள்கிறான்!

இந்திரியங்களைச் செயல் புரியாமல் அடக்கி விட்டு, மனத்தை மட்டும் ஆசைக்கு அர்ப்பணித்து விட்டவன் மூடனும் அயோக்கியனுமாவான். மனத்தை முதலில் பக்கு வப் படுத்தி இந்திரியங்களை அவற்றின் போக்கில் விடாமல் தனது இலட்சியத்துக்கு உதவிகரமாக உபயோகிக்கத் தெரிந்தவனே கர்ம யோகியாவான். சிறந்தவன் செய்யும் கருமமும் சிவமயமானதுதான்!

சாதாரண மனிதனுடைய பேச்சு வெறும் கூச்சலாகும். ஞானியினுடைய பேச்சோ உபதேசமாகும். பாமரனுடைய மூச்சு அவனை ஒவ்வொரு கணமும் அழித்துக் கொண்டிருக் கிறது. ஞானியின் மூச்சு பிராணாயாமமாகி அவனை வளர்த்

கருகு குழல் மடவார்கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடைவோமே

துக் கொண்டிருக்கிறது. ஞானியின் செயல் உண்மையில் கர்ம மல்ல. அகர்மமேயாகும்.

கருமம் செய்ய வேண்டுமென்று அவன் நினைப்பதோ விரும்புவதோ யில்லை. ஆனால் கர்மம் நிகழ்கிறது. அவன் தன்னை யறியாமலேயே ஞான கர்மத்தை செய்து கொண்டிருக்கிறான்.

பாமரன் தனக்காகத் தொழில் புரிகிறான், ஆனால் ஞானியோ உலகத்திற்காகச் செயல் படுகிறான்.

பாமரன் பயன் கருதிப் பயனுக்காகவே செயல் படுகிறான். ஞானியினுடைய செயலிலே பயன் கருதாமையே அஸ்திவாரமாக அமைந்துள்ளது.

செயலை ஒழி என்று பகவான் கூறவில்லை. சரியாகச் செயல் படு என்று தான் கூறுகிறார். கருமத்தில் பற்றின்றி தர்மமே கர்மமாக எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணித்துத் தொழில் புரியும் பாதையைக் கீதை மூலம் காட்டுகிறார்.

சோம்பேறியா யிருக்க எந்த மனிதனுக்கும் உரிமை கிடையாது. அதே மாதிரி தவறான காரியங்களைச் செய்து கொண்டிருக்கவும் உரிமை கிடையாது.

சரியான செயலைச் செய்யத் தெரியாமலோ அல்லது செய்ய முடியாமலோ இருக்கும் போது செய்யாமை நன்று. கர்மம் செய்வதற்குச் சரியான வழி தெரியும் பொழுது சும்மாயிருப்பது பெரும் தவறு,

அர்ஜுனன் யுத்தம் செய்யத்தெரிந்தவன். துஷ்டர்களை ஒழிப்பதற்கான அவசியமும் கடமையும் அவனுக்கு இருக்கிறது. எனவே அவன் போர்செய்தே யாக வேண்டும். அப்படி செய்யாம லிருந்தால் அவன் கடமை தவறியவனுவான் என்பதைத்தான் கண்ணன் எடுத்துக் காட்டினான்.

சரியானதும் அவசியமானதுமான கர்மம் ஞான மார்க்கத்திற்கான சாதனையேயாகும். உலகத்தில் அதர்மத்தை அடியோடு போக்குவதற்காக பகவானே பிறவி என்ற மகத்தான கருமத்தைச் செய்யும் பொழுது, அவனை அடைய

தாயாகிய உலகங்களை நிலைபேறு செய் தலைவன்
நேயாடிய பெருமான் இடம் நெய்த்தானம் எனீரே.

வேண்டிய பக்தன் ஏன் கர்மத்தை அலட்சியப் படுத்த வேண்டும்?

ஆத்மார்த்த லட்சியத்துடன் உற்ற கரும்ம் செய்வது ஞான மார்க்கத்துக்கு விரோதமானதல்ல. ஆராய்ந்து பார்க்கின் ஞானம் வேறு—கர்மம் வேறு என்று கூட பிரித்தறிய முடியாது. கர்மம் ஞான முத்திரையிடப் பட்டால் அகர்மமாகி விடுகிறது.

சரியான அறிவு தான் ஞானம். சரியான கருமமே தர்மம். தெளிவான நோக்கமே இலட்சியம். மேலான பதமே மோட்சம்.

செயலிலே செய்யாமையும், செய்யாமையில் செயலுமே கர்மயோகம்.

பூஜை, தியானம், சாது சங்கம், அடியாரோடு அளவளாவல், இதிகாச புராண பிரவசனங்கள், கதா காலட்சேபங்களில் கலந்து கொள்ளல் போன்றவை சற்கர்மங்களாம். இம்மாதிரி கருமங்கள் ஞானம் பெறுதற்கு மிக்க உதவிகரமாக இருப்பவையாகும். கர்மேந்திரியங்கள் சத்தான தொழிலைப் புரியும் பொழுது ஞானேந்திரியங்களாகி விடுகின்றன. அந்த கர்மமும் ஞான கர்மமாகி விடுகிறது. இதுவே கண்ணன் காட்டும் கர்மயோகம்.

(தொடரும்)

செந்நெல் வைத்த திரு அருள்

(வ. சு. செங்கல்வராய பிள்ளை.)

கூவம் என்பது திருவிற்கோலம் எனத் தேவாரத்திற் சொல்லப் படும் சிவஸ்தலம். இந்தத் தலத்துக்குச் சம்பந்தப் பெருமான் அருளிய தேவாரம் உளது. இத் தலம் சென்னைக்கு மேற்கில் உள்ள கடம்பத்தூர் ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கு 6 மைல் தூரத்தில் உள்ளது. சென்னையிலிருந்தும் 'பஸ்'ஸில் போகலாம். இலம்பையங் கோட்டூர் என்னும் தேவாரம் பெற்ற தலமும் இதற்கு அரு

கில் $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் உள்ளது. இத்தலத்துச் சிவபிரான் தீண்டாத் திருமேனி. இவர் தீண்டாத் திரு மேனியர் என்பதை வைத்து ஓர் அரிய அம்மானைப் பாடல் உள்ளது: அது பின்வருமாறு —

பாலாறு சேரும் பரமர்திரு விற்கோலர்
நாலாறு சேரி நடுப்புகுந்தார் அம்மானை
நாலாறு சேரி நடுப்புகுந்தா ராமாயின்
தோலாமை யோடெலும்பு தொட்டதுண்டோ அம்மானை
தொட்டனரென் றேமறையோர் தொட்டிலர்காண்
அம்மானை.

அதிக மழை பெய்வதாக இருந்தால் சுவாமி மேல் வெண்மை நிறம் படருவதும், யுத்தம் நேரிடுவதாயிருந்தால் சுவாமி மேல் சிவந்த நிறம் படருவதுமான அதிசய ஸ்தலம் இது என்று ஆன்றோர் கூறுவர்.

''ஐயன் நல்லதிசயன்'' என்றார் சம்பந்தப் பெருமான். 'திரிபுராந்தகர் என்பது சுவாமி பெயர். திரிபுரம் எரித்த மூர்த்தி திருக்கையில் விற்கோலமாகத் தங்கிய இடம் ஆதலின் இந்தத் தலம் 'திருவிற்கோலம் எனப்படும்.

'புரங்கள் வெந்தறச்
செருத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே'
—என்பது சம்பந்தர் திருவாக்கு.

இத் தலத்துப் பெருமானுடைய திருவிளையாடல் களுள் ''செந்நெல் வைத்த திருவிளையாடல்'' என்பது ஒன்று. இத் தலத்தில் 'தரும சீலர்' எனப் பெயரிய அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் திருவிற் கோலப் பெருமானை நாடோறும் முப்போதும் வணங்கும் தவ ஒழுக்கத்தினர். நாடோறும் சிவனடியார் ஒருவருக்கேனும் அமுதளித்துப் பின்னர்தான் தாம் உண்பர். இவருடைய பக்தியை விளக்குதற்கோ இவருடைய சீலத்தை விளக்குதற்கோ கொடிய பஞ்சம் வந்து நேர்ந்தது; வறுமை மிகவாயிற்று; தருமசீலர் அப்போதும் தமது நியமம் தவறாது சிவனடியார் களுக்குச் சுவை அமுதும் நறுங் கறியும் அளித்து வந்தார். இதனால் அவரது செல்வம் குன்றியது; அண்ணலார் அடி

காலன் திறல் அறச் சாடிய கடவுள் இடம் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை அடையா வினைதானே.

யார் தமை அமுது செய்விக்கப் போதிய பொருள் இலாது
போயிற்று; தமது மனைவியின் பொன்தாலி ஆகிய அணி
களை ஒவ்வொன்ருக விற்றுத் தமது நியம நெறியில் நின்று
வந்தார். பஞ்சகாலம் ஒழிந்த பாடில்லை. இல்லத்தே ஒரு
பொருளும் இலாது போயிற்று. என் செய்வார் பாபம்;
நன்று, இனி இல்லந்தோறும் செந் நெல் இரந்தேனும் அடி
யார்களை அமுது செய்விப்பேன் எனத் துணிந்தனர், அவ்
வண்ணமே செய்து வந்தார். ஒரு நாள் எங்கு இரந்தும்
செந் நெல் கிடைக்க வில்லை. தருமசீலர் வறிது மீண்டு
மனைவியிடம் தமது மன வருத்தத்தை எடுத்துரைத்து
மெய் தளர்ந்திருந்தார். இதுவும் 'இறைவன் சோதனையோ
என்று அம்மையாரும் வருந்தி நின்றனர். பின்னர் தரும
சீலர் எழுந்து சென்று, ஆற்றில் குளித்துத் திருவிற்கோலப்
பெருமானைப் பூசித்து வாழ்த்தித் தமது வீட்டுக்கு மெல்லத்
திரும்பி வந்தார்; இவ்வாறு எட்டு நாள் பசியுடனும், அடி
யார்க்கு அமுதளிப்ப தின்றியும், வருந்தி வந்தார். ஒன்ப
தாம் நாள் மெய் தளர்ந்து மயங்கி வீழ்ந்தார். அவர் மனைவி
யாரும் அந்தோ என அழுது இரங்கினர். அத் தருணத்தில்
சிவனடியார் ஒருவர் வந்தார். தளர்ந்த மேனியர்; குழி
விழுந்த கண்ணினர். வாடி வதங்கின முகத்தினர். 'மிக்க
பசியுடன் வந்துள்ளேன்' என்றனர்; மயக்கம் சற்று
தெளிந்திருந்த தரும சீலர் சுடுவேல் பாய்ந்தது போலத்
தமது உள்ளம் சுடத் தள்ளாடி எழுந்தார். தாமும் தம்
மனைவியும் வந்த பெரியாரை வீழ்ந்து வணங்கினர். அவரை
ஆதரித்து இருத்தினர்; அவரது வாட்டத்தைக் கண்டு தாம்
பின்னும் வாட்டம் உற்றனர். இன்னது செய்வதென்று
தெரியாது தழலில் இட்ட மெழுகுபோல உருகினர்; 'நன்று,
இன்று இந்நகர் முழுவதும் அலைந்து சென்று நெற்பலி
இரந்து பார்ப்பேன். செந்நெல் கிடைக்காவிடின் என் ஆவி
யை விடுவேன்' என்று மனைவியிடம் கூறிப் புறப்பட்டார்;
உடலின் தளர்ச்சியையும் பொருட்படுத்த வில்லை. இரந்
திரந்து இரண்டு படி செந் நெல் பெற்ருர்; வந்த அடியார்
பசியுடன் வாடுகின்ருரே என்ற வருத்தம் ஒருபால்.
பிச்சைக்குச் சென்ற கணவர் எங்குத் தள்ளாடி வீழ்ந்த

கடியார் மலர் புனல் கொண்டு தன் கழலே தொழுதேத்தும்
அடியார் தமக்கு இனியான் இடம் ஆலந்துறை யதுவே.

னரோ என்ற அச்சம் ஒருபால் ஆகத் தருமசிலரின் மனை
வியார் ஆற்றொணாத் துயரத்துடன் இருந்தார். செந் நெல்
லுடன் வந்த கணவரைக் கண்டு மகிழ்ந்து, உடனே அமுது
சமைத்து, காத்திருந்த அடியார்க்கு அமுது இட்டு மகிழ்ந்
தார்; வந்த அடியாரும் மகிழ்ந்துண்டு சென்றனர். அவர்
சென்ற பின் மிகுந்திருந்த அன்னத்தை அம்மையார் கணவ
னுக்குப் படைத்தனர். தருமசிலரும் தாம் உண்ண எழுந்து
சென்றனர். அச்சமயத்தில் திருவிற் கோலத்துச் சிவ
பிரான் தருமசீலரது உத்தம சீலையை உலகுக்குக் காட்ட
விரும்பி, மிக மூப்புற்ற கிழவராய், என் பெழுந்தியங்கும்
யாக்கையராய்ப், பல நாள் பட்டினி கிடந்த பான்மைய
ராய், நடைதளர, விற் கோலத்தன் என்னும் பெயர் தமக்கே
பொருந்தும் எனக் காட்டுவது போல வளைந்த வில்லின்
கோலத்தினராய்க், குனிந்த முதுகுடன், தண்டூன்றித் தரும
சீலருடைய மனையிற் புகுந்து, "ஒரு பிடி அன்னம் இடுங்
கள்; புண்ணியம் உமக்கு" எனக் கூறி நின்றனர். "நான்
உண்பதற்கு முன்னர் வந்தனரே, என்ன தவம் செய்
தேனோ" என மகிழ்ந்த தருமசீலர் வந்த பெரியவரை எதிர்
சென்று வணங்கி, அவரை ஆதரித்து இருத்தி, மனைவி
யாரை அழைத்து அவருக்கு அன்னம் படைக்கச் சொன்
னார்; அம்மையாரும் அவ்வணமே இலையிட்டு அமுதம்
படைத்தனர்; அப்போது பெரியார் "உங்கள் அன்பே
அன்பு" எனக் கூறி மறைந்து, அசரீரியாய்—"இந்தப் பஞ்ச
காலம் நீங்கும் வரையில் நமது ஆலயத்தில் நாள் தோறும்
குடம் நிறையச் செந் நெல் வைப்போம்; கொள்ளுங்கள்"
எனக் கூறினர். தருமசீலர் இவ்வுரையைக் கேட்டு உச்சிக்
கூப்பிய கையினராய்க் கண்ணீர் சொரிந்து, 'கடையேனைப்
பொருட்படுத்தி வந்தருளிய பெருமானே' என்னே உன்
திருவிளையாடல்"—என உள்ளம் நைந்து உருகிக் கூறி—
ஆலயத்துக்குச் சென்று இறைவனை வணங்கி எழும்போது,
அங்கே ஒரு குடம் நிறையச் செந் நெல் இருக்கக் கண்டு
மகிழ்ந்தார். அதைத் தமது வீட்டுக்குக் கொண்டு வந்து
எண்ணிலா அடியார்களுக்கு நல்ல அமுதளித்து—சேடத்
தைத் தாம் உண்டு மகிழ்ந்தார். இங்ஙனம் நாள் தோறும்

ஆதியவர் கோயில் திரு ஆலந்துறை தொழுமின்
சாதிம்மிகு வானோர் தொழு தன்மை பெறலாமே.

கிடைக்கும் செந் நெல்லைக் கொண்டு தொண்டர்களுக்கு அமுதளித்து வந்து சிவாநுபூதிச் செல்வராய்த் திகழ்ந்து சிவனடி கூடினர்.

இததிறம் நாடோறும் இறைவன் ஆலயம்
வைத்தசெந் நெற்கொடு வருந்தொண் டர்க்கெலாம்
துய்ததிட அமுதரு சுவையோ டும்படைத்
துத்தமா சிவனரும் பதததில ஒன்றினர்.

அந்தணாளராம் தருமசீலருக்குச் செந் நெல் வைத்த காரணத்தால் திருவிற் கோல நாதருக்குச் 'செந் நெல் வைத்தவர்' என்றும் பெயர் போந்தது.

"மறையவர் தமக்கிம் முறைமையிற் செந்நெல்
  வைததலால அரிய விற் கோலத (து)
இறையவன் உலகிற் செந்நெல்வைத் தவனும்
  என் னுமெய்ப் பேரடைந் தனனால்;
அறையுமப் பெயரை மனப்பிழைந் துரைப்போர்
  அழிவிலா மிக்கசீர்ச் செல்வம்
நிறைபெருங் கல்வி பெறுகுவர் பின்னும்
  நிகரில்பே றிணபவீ டடைவார்"

—(திருக்கூவப் புராணம்.)

இதுதான் பொருள்

(கி. வா. ஜ.)

உலகில் தோற்றும் பொருள்கள் யாவும் ஐம்பெரும் பூதங்களின் பரிணாமம். ஒவ்வொரு பொருளிலும் வெவ் வேறு அளவில் பூதங்கள் கலந்திருக்கின்றன. சிலவற்றில் வானக் கலப்பு மிகுதியாக இருக்கும். சிலவற்றில் வாயுக் கலப்பு மிகுதியாக இருக்கும். அக்கினியின் பகுதி அதிகம் உள்ளனவும் நீரின் பகுதி அதிகமாயினவும் மண்ணின் அளவு மிகுதியாக அமைந்தனவுமாகப் பொருள்கள் இருக் கின்றன. பொருளின் தோற்றம் கண்ணுக்கு வெவ்வேறாக இருந்தாலும் அவற்றின் மூலப் பொருள்கள் ஐந்து. அவை

அடிஆயும் அந்தணர் காழியுள் அணிஞான சம்பந்தன்
படியால் சொன்ன பாடல்சொலப் பறையும் வினைதானே.

களே பஞ்ச பூதங்கள். இவற்றின் கலப்பால் அமைந்தமை யால்தான் பிரபஞ்சம் என்ற பெயர் உலகத்துக்கு வந்தது.

ஐம்பெரும் பூதங்களுக்கு மேலே ஒன்றும் இல்லையென்றும் அவையே உண்மைப் பொருள்கள் என்றும் அந்த மூலப் பொருள்களிலிருந்தே யாவும் உண்டாகின்றன என்றும் சொல்லும் வாதிகள் இருக்கின்றனர். அவர்கள் சொல்வதைக் கேட்டால் அது நியாயம் என்றே தோன்றும். "வானும் புனலும் பாரும் கனலும் மாருதமுமாகிய ஐந்து பூதங்களே உண்மைப் பொருளோ?" என்ற ஐயம் உண்டாகும். பௌதிக வாதம் அறிவு பெருகாததற்கு முன் தோன்றியது. அந்த நிலையில் இருக்கும்போது தோன்றும் ஐயம்,

"வானோ புனல்பார் கனல்மா ருதமோ?"

என்பது.

புலன்களால் அறியப்பெறும் ஐம்பூதங்களுக்கு அப்பால் ஒன்று இருக்கிறது. அது அறிவு. பொறிகளை வாயிலாகக்கொண்டு வேலை வாங்கும் மனத்திற்கு இனம். அந்த அறிவிலே புறத்தில் உள்ள பூதங்களின் தொடர்பு இல்லாமலே நினைவுகள் தோன்றுகின்றன. பருப் பொருளாக உள்ளவை அழிகின்றன. நுண்பொருளாக இருப்பவை எளிதில் அழிவதில்லை. அந்த நுட்பமான அறிவுதான் உண்மைப் பொருளோ?

இந்த ஐயம் அடுத்தபடி உண்டாயிற்று.

"ஞானோதயமோ?"

என்றார்.

ஞானம் என்பது அறிவு. அறிவாவது அறியாமையைப் போக்குவது. மனிதன் ஒன்றை அறியும்போது அவ்வாறு அறிவதற்குக் கருவியாகச் சுருதி அநுபவங்கள் உதவுகின்றன. யுக்தியும் அநுபவமும் நம்மிடம் உள்ளவை. சுருதி புறத்தில் உள்ளது. தெளிவு பிறவாத இடத்தில் உள்ளவற்றைவிடத் தெளிவு பிறந்த இடத்தில் உள்ளது சிறந்தது. அறியாமையைப் போக்கும் தெளிந்த அறிவுப்

அச்சம் இலர் பாவம் இலர் கேடும் இலர் அடியார்
நிச்சம் உறு நோயும் இலர் தாமும் நின் நிபூரில்

பிழம்பாக உள்ளது வேதம். அது மனிதனல் இயற்றப் படாது. அபௌருஷேயம் என்று சொல்லப் பெறுவது- எல்லா அறிஞர்களுக்கும் அறிவு உதவும் மூல பண்டாரமாக இருப்பது அது. அறியாமை யென்னும் இருளைப் போக்க உதவும் விளக்கு அது. ஆகவே அதுவே உண்மைப் பொருளாக இருக்கலாம். இந்த நினைவுக்குப்பின் அடுத்த கேள்வி எழுகிறது.

"நவில்நான் மறையோ?"

இன்னும் முடிவு காணவில்லை. நான்மறை யாவரிடமும் இருக்கிறதா? அதுவும் நூல்தானே? அதை உணர்த்திய பொருள் ஒன்று உண்டா? இல்லையா? இப்படிக் குழப்பம் ஏற்படவே, இத்தனை ஆராய்ச்சிக்கும் நான்தானே இடமாக இருக்கிறேன்? என்னை மறந்து வேறு எங்கோ திரிகி றேனே! நான்தான் நான்கண்ட பொருள். இதுதான் மெய்ப்பொருள். இப்படி ஓர் எண்ண அலை தோன்றியது.

"யானோ?

இத்தனை ஆராய்ச்சியையும் செய்பவன் நானோ? மனத்தில் அல்லவா ஆராய்ச்சி பிறக்கிறது? அந்த மனமே உண்மைப் பொருளோ?

"மனமோ?

இப்படி ஒன்றன்பின் ஒன்றாகக் கேள்வி பிறக்கவே, முடிவு கட்ட முடியவில்லை. ஒவ்வொன்றையும் தனியே வைத்துப் பார்க்கும்போது அதுவே பெரிதாக, மெய்ப் பொருளாகத் தோன்றுகிறது. ஆனால் மற்றவற்ருேடு வைத்து ஒப்பு நோக்கும்போது ஒரே குழப்பம்.

வானும் அன்று; புனலும் அன்று; கனலும் அன்று; மாருதமும் அன்று; நான்மறையும் அன்று; யானும் அன்று; மறையும் அன்று-இப்படித் தோன்றுகிறது. அன்று, அன்று என்று சொல்லிக் கொண்டே போனல், இதுதான் என்று தீர்மானம் செய்வது எப்படி? கடைசியில் அருண கிரியார் கேட்கிறார்.

எனைஆண் டஇடத்
தானே பொருளா வதுசண் முகனே?

நச்சம் மிடறுடையார் நறுங் கொன்றை நயந்தாளும்
பச்சம் உடை யடிகள் திருப் பாதம் பணிவாரே.

மேலே சொன்ன ஐந்து வகையான பொருள்களைச் சொல்லிக் கேட்ட கேள்விகளுக்கும் இந்தக் கேள்விக்கும் வேறுபாடு இருக்கிறது. இங்கே "தானோ,?" என்று சேர்த்துச் சொல்கிறார். அது அழுத்தத்தைக் காட்டுவது. முன்னாலே சொன்ன கேள்விகளுக்கு இல்லை என்ற விடை வரும். இந்தக் கேள்வியும் அப்படி உள்ளதா? இல்லை. இதில் ஏதோ சிறப்பு இருக்கிறது. அதனால், 'என்னை யாண்ட இடமோ?' என்று சொல்லாமல் "எனை ஆண்ட இடந்தானோ?" என்று அழுத்தமாகக் கேட்கிறார். 'எனை ஆண்ட இடம்' என்று குறிப்பது ஆண்டவனை. ஆன்மாக்களை ஆள்பவன் அவன். அவன்தான் உண்மைப்பொருள். இதை வெளிப்படையாக அருணகிரியார் சொல்லாமல் மற்ற கேள்விகளோடு சேர்த்து இதையும் வினவாக்கி விட்டார்.

"காயும் கோணற்காய் கொள்ளடா மைத்துனா!
கதையும் விடுவித்தேன் சொல்லடா மைத்துனா"

என்று ஒரு விடுகதை உண்டு. அந்த விடுகதையிலேயே அதற்கு விடையும் இருக்கிறது. அதுபோலவே இந்தப் பாட்டில் உள்ள கேள்விகளுக்கு இதிலேயே விடை இருக்கிறது. அதைக் குறிப்பினால் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அதை இறுதியில் வைத்ததோடு, தான் என்ற சாரியையும் சேர்த்து வைத்திருக்கிறார். அந்தக் குறிப்பினால், ஆன்மாக்களுக்கு அருள் நல்கி ஆளும் இறைவன் தான் மெய்ப் பொருள் என்பதைத்தெரிந்துகொள்ள வேண்டும். கந்தரலங்காரத்தில் உள்ள பின்வரும் பாடல் இக் கருத்தையே வேறு வகையில் சொல்கின்றது.

"தேனென்று பாகென்று உவமிக்
கொணாமொழித் தெய்வவள்ளி
கோன்அன்று எனக்குஉப தேசித்தது
ஒன்றுஉண்டு; கூறவற்றோ?
வானன்று, காலன்று, தீயன்று,
நீரன்று, மண்ணுமன்று;
தானன்று; நானன்று; அசரீரி
அன்று சரீரியன்றே."

நிறையும் புனல் சடைமேலுறை அடிகள் நின்றியூரில்
உறையும் இறையல்ல(து) என(து) உள்ளம் உணராதே.

திருவாலங்காட்டுத்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

புவிபுனல் காலும் காட்டி, சிகியொடு வானம் சேர்த்தி
  புதுமன மானும் பூட்டி — யிடையூடே
பொறிபுலன் ஈரைந்தாக்கி, கருவிகள் நாலும் காட்டி
  புகல்வழி நாலைந் தாக்கி — வருகாயம்;

பவவினை நூறும் காட்டி, சுவமதி தானும் சூட்டி
  பசுபதி பாசம் காட்டி — புலமாயப்—
படிமிசை போவென் றோட்டி அடிமையை நீவந் தேத்தி
  பரகதி தானும் காட்டி — அருள்வாயே;

சிவமய ஞானம் கேட்க தவமுநி வோரும் பார்க்க
  திருநடம் ஆடும் கூத்தர் — முருகோனே!
திருவளர் மார்பன் போற்ற திசைமுகன் நாளும் போற்ற
  ஜெகமொடு வானம் காக்க — மயிலேறிக்;

குவடொடு சூரன் தோற்க எழுகடல் சூதம் தாக்கி
  குதர்வடி வேலங் கோட்டு — குமரேசா!
குவலயம் யாவும் போற்ற பழனியில் ஆலங் காட்டில்
  குறமகள் பாதம் போற்று — பெருமாளே!

(சிவமய ஞானம்......முருகோனே!)

(பதவுரை.) சிவமய ஞானம் கேட்க-கேடு இலாத சிவஞானத்தைக் கேட்டறியவும்;

தவ முனிவோரும் பார்க்க - (கடுந்) தவம் செய் முநிவர்கள கண்டு களிக்கவும்;

திரு நடம் ஆடும் கூத்தர் முருகோனே-திருக்கூத்து இயற்றுகின்ற ஆடல் அரசருடைய குண மணக் குழந்தையே;

(திருவளர்......குமரேசா!)

திருவளர் மார்பன் போற்ற-திருமகள தங்கிய மார்பினரான திருமால் துதிக்கவும்;

நீண்டும் பொழில்சூழ்ந்த திருநின்றி யதுதன்னில்
ஆண்ட கழல்தொழில் அல்லது அறியார் அவர் அறிவே-

திசைமுகன் நாளும் போற்ற-நான்கு திசை நோக்கிய நான்முகன் என்றும் வழிபட்டு இறைஞ்சவும்;

ஜெகமொடு வானம் காக்க மயில் ஏறி-மண்ணும் விண்ணும் (மாபெரும்) காப்படைய மயில் மேல் அமர்ந்து;

குவடொடு சூரன் தோற்க-(தூர்த்த) குன்றுடன் சூரன் தோல்வி யடைய;

எழு கடல் சூதம் தாக்கி-(மாபெரும் அலை) எழுகின்ற கடலில் (நின்ற) மாமரத்தை மோதி;

குதர் வடி வேல் அங்கு ஒட்டு குமரேசா-பிளவுபடும்படி வேல் படையை அந்த இடங்களில் விரைந்து செலுத்திய குமர தெய்வமே!;

(குவலயம்......பெருமாளே!)

குவலயம் யாவும் போற்ற-உலகம் அனைத்தும் உவந்து துதிக்க;

பழனியில் ஆலங் காட்டில்-பழையனூரிலும் திருவாலங் காட்டிலும்;

குறமகள் பாதம் போற்று பெருமாளே-குறக்கொடியான வள்ளியார் திருவடிகளை வணங்குகின்ற பெரியோனே!

(புவி......காயம்.)

புவி புனல் காலும் காட்டி-மண் நீர் காற்றுகளைத் தோற்றுவித்து;

சிகியொடு வானும் சேர்த்தி-(அம் மூன்றுடன்) நெருப்பையும் ஆகாயத்தையும் நெருக்கப் பிணைத்து;

புது மன மானும் பூட்டி-புதுமை (விரும்பும்) உள் மனமாகிய மானை இணைத்து;

இடையூடே பொறி புலன் ஈரைந்து ஆக்கி-இடை நடுவில், (மெய் வாய் கண் மூக்குச் செவியெனும்) அறி கருவிகள (ஐந்து; சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் எனும்) புலன்கள் (ஐந்து ஆக இருக்கும்) பததையும் தொடர்பு படுததி, (அவைகளுடன்),

கருவிகள் நாலும் காட்டி-(மனம் புததி அகங்காரம் சித்தம் எனும்) கருவிகள ஐந்தையும் கலக்க வைத்து;

புகல் வழி காலைந்து ஆக்கி வரு காயம்-(எருவாய் கருவாய் இரண்டு; செவித் துளை இரணடு; நாசித்துளை இரண்டு; கண் துளை

அழலின் வலன் அங்கையது ஏந்தி அனலாடும்
கழலின் ஒலி யாகும்புரி கடவுள கனகண்ணே.

இரண்டு; வாய் ஒன்று என்று எவரும்) கூறும் வழிகளான பொத்தல் ஒன்பதைப் பொருந்தி வந்த உடல்;

(பவ வினை......பரகதி காட்டி அருள்வாயே!)

பவ வினை தானும் காட்டி-(மென்மேலும்)பிறத்தற்கு இடமான பொல்லா வினைகளைப் புலனாக்கி,

சுவ மதி தானும் சூட்டி-(அறிவித்தால் அறியும்) அறிவுச் செல்வத்தை (ஆன்மாவில்) அணிபெறச் சேர்த்து;

பதி பசு பாசம் காட்டி-(அதன் மூலம், இது) கடவுள் இயல், (இது) ஆன்ம இயல், (இது) ஆணவ இயல் (என்று அருள் நூற்கள் மூலம்) அறிவித்து;

புலம் மாய படிமிசை போ என்று ஒட்டி-பாச அறிவு, பசு ஞானம் (இரண்டும்) கெட(ச் சாதனை செய்தற்கு) நிலவுலகம் செல் என்று விரட்டி;

அடிமையை நீ வந்து ஏத்தி-(சுதந்தரம் இன்றி, ஆணவ கன்ம மாயைகட்கு அடிமைப்பட்டு உலகில் இருக்கும்) அடியேனைத் தேவரீர் வந்து ஆசி செய்து;

பரகதி தானும் காட்டி அருள்வாயே-பர மூத்தியைப் புலனாக்கி (அதை) அருள் புரிவீராக (எ-று).

விரிவுரை

பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் எனும் மூதன்மை அறிவு மூன்று.

பாச அறிவு படிப்பால் வருவது; பசு அறிவு, தளர்ந்த உயிரில் உயிர்க்கும் தடிப் புத்தி. இந்த இரண்டும், பிறவிக்கு இடம் செய்யும். பதி அறிவு, தெய்வ அறிவு; அஃது, அடி ஞானம், சிவ ஞானம், பரஞானம், பதிஞானம் என்றெல்லாம் அறிவிக்கப் பெறும்.

பாச அறிவால், பசு மதியால், வினைகள்தான் பெருகி வினையும். பதி யறிவு பதித்தால்தான், சிவகதிப் பேறு சித்திக்கும்.

சிவத்தை இடையறாது சிந்திக்க, அலை மோதாமல் மனம் அடங்கும். அந்நிலையில் அருள் நாதம் கேட்கும். புனித கூத்தர் கூத்தில் இருந்து, அந்நாதம் பொங்கி வரும். சிறந்த அந் நாதக் கேள்வியில் சிவஞானம் சித்திக்கும். வாய்க்க அது, இதுவே வழி.

வீரன் மலி அழகார் பொழில் மிடையும் திருநின்றி
அரன் கழல் அல்ல(து) எனதுள்ளம் உணராதே.

கெழுமி வரும் பிற அறிவுகள், தாமே கெடும்; சிதையாத ஞானம் சிவஞானம். அதனால் அதனைச் சிவமய ஞானம் என்று அறப்பித்தார்

கூத்தர் கூத்தை அகத்தில் கண்ட அருந்தவர், புறத்திலும் அதைக் கண்டு பூரிப்பர்.

திருவாலங் காட்டில், உக்ரமாக நடந்தது ஊர்த்துவ தாண்டவம், இது சண்ட தாண்டவம் எனவும் பெறும். அது, காளியொடு வாது நடம் ஆடு கதை என்பர்; அவ்வளவுதானா? பிறப்பு இறப்பைத் தீர்க்கும் இப் பெருந் தாண்டவம் என்று, பேசுகின்றார் பெரியோர். கார்க்கோடகர், முஞ்சிகேசி முனிவர் போன்றவர், அரிய இக்கூத்தை அறிந்தவர்கள்.

இக் கூத்தருடைய குணமும் மணமும் கொண்ட கோமகனே என்ற பொருளில்,

'கேட்க—பார்க்க—ஆடும் கூத்தர் முருகோனே'

என்று கூவி யழைத்த நடை கோடி பெறும்.

அழிவு செய்ய ஆரம்பித்தான் சூரபதுமன். அவன் எதிர்ப்பிற்கு அஞ்சி, ஆக்கவும் அளிக்கவும் வல்ல அயனும் மாலும், காக்க முடியாமல உயிர்களைக் கைவிட்டனர்.

அந்நிலையில், அகில உலகமும் கதறி அழுதது. கவலை வேண்டா! காப்போம் யாம் என்று மயில்மேல் ஏறினன் கந்தன். அயனும் மாலும் அதைக் கண்டு, பலபட வாழ்த்திப் பாராட்டினர்.

ஆறு நாள் போரில், எதிர் நிற்க ஆற்றாத சூரன், ஒளிய விரைந்து ஓடினான். பின்புறத்தில் இருந்து, அவனை மறைத்துத் தொடர்ந்தது ஒரு மலை.

மயங்கி ஓடினவன், மாபெரும் கடல் நடுவில் ஒரு மாமரம் ஆனான்.

அவனையும், அவன் சொரூபத்தையும், பிளவு படுத்தும் பயனான வேல் படையை, எம்பிரான் எடுத்து ஏவினான். விரைந்த வேல், தூர்த்த சூரர்க்குத் தோல்வி யுண்டாக்கி, மலையைத் துகளாக்கி, கடல் நடுவில் தனி எழுந்த மாமரத்தைத தடிந்தது. 'போற்ற—காக்க—மயில் ஏறி, சூரன் தோற்க—சூதம் தாக்கி' பிளவு படுத்த ஏவிய பெருமை வேலை, குதர் வேல் என்றார். குதர்-பிளப்பு.

தெல்லின் பொழில்சூழ்ந்த நின்றியூரின் நிலையார் தம்
செல்வர் அடியல்லா(து) என சிந்தை உணராதே.

பழையனூரைப் பழனை என்றார்; வாக்கைக் காக்க, எழுபது வேளாளர் தீயில் விழுந்து திரு நடம் கண்ட தெய்வப் பதி அது என்று, தெய்வச் சேக்கிழார் பெரிய புராணத்தில் தெரிவிக்கிறார்.

சென்னையிலிருந்து முப்பத்தேழு மைல் தூரத்தில் இருக்கும் திருவாலங்காடு, அந்தப் பழையனூர்க்கு அணிமையில் உளது; எம் பெருமான் அரிய சபை ஐந்தில், அது இரத்தின சபை எனப் பெறும்.

அந்த ஆலங் காட்டில் எத்தனையோ அதிசயம்; அருமை மிக்க அப்பதியில், குமரன் பாதத்தை, குறமகள் என்றும் கும்பிடுகிறாள்; பணி செய்த பணியும் குறமகள் திருவடிகளை, குமரன் மாறிக் கும்பிடுகிறான். இந்த அருங் காட்சியை, அகில உலகமும் அறிகிறது; அந்நுட்பம் அறிந்து மகிழ்ந்து, துதி மொழிகளால், இருவரையும் இன்றுவரை துதித்துக் கொண்டேயிருக்கின்றது. சொல்லளவில் உரை செய்தால், இங்கு இவ்வளவுதான் சொல்ல முடியும்; இது குறித்து, கந்தர் அநுபூதி உரையிலும் சில குறிக்கப்பட்டுள்ளன. அமிர்தவசனி காரியாலயத்தில் அந்நூல் கிடைக்கும்.

உள்ளம் கள்ளமானால், ஆகாமியம் ஆர்ப்பரிக்கும்; அங்ஙனம் ஆகாமல், பயனுள்ள திருப் பணியாளரிடம பணிவு காட்டுகின்றான் பரன்; என்ன அருமை!

'குவலயம் யாவும் போற்ற, பழனையில் ஆலங்காட்டில்
குறமகள் பாதம் போற்று பெருமாளே'

என்ற திருவடியை, சிந்திக்கும் போதே உடல் சிலிர்க்கிறதே! இவ்வளவும் செய்யும் தெய்வம், சுத்த சைதன்ய ஸ்வரூபம் என்பதை, பெருமாளே எனும் விளியில் பெற வைத்தார்.

மனம் இரண்டு, ஒன்று அகமனம்; மற்றொன்று புற மனம்.

தாவி ஓடுவது மானின் தகுதி. அதுபோல் விஷயாதிகளில் தாவும் அகமனத்தை, மானை உருவகிப்பது மரபு. மான் உடல மென்மை; அது போல மிக மிக நுண்ணியது அகமனம்.

பூதம் ஐந்து; அகமனம் ஒன்று; பொறிகள் ஐந்து; புலன் ஐந்து; நலமிலாத அகக் கருவிகள் நான்கு; நவத்துவாரம்; இவ்வளவுதான நான் என்று, தன்னைக் காட்டித் தருகின்றது காயம்.

வினையளவாக,

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

நெறியில்லவர் குறிகள நினையாதே; நின்றியூரில்
மறியேந்திய கையான் அடி வாழ்த்தும் அது வாழ்த்தே.

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்''

ஆகி, மேலும் மேலும் தோன்றி யிருந்து காயம் தொலைகிறது. எதனால் இப்படி? ஆர்த்துச் செய்த வினைகளின் பயனை அனுபவிக்க வேண்டாமா? வேதனை பலப்பல விளைகின்ற போது, பார்! பார்! நீ செய்த அளவிலாத வினைகளை என்று அறிவிக்கின்றான் ஆறுமுகப் பெருமான். அதை, 'பவவினை நூறும் காட்டி' என்பதில் அறிவித்தார். நூறு என்பது, அளவிலாமை யெனும் பொருளில் நின்றது. அருளார்ந்த அந்த அத்தன், அவைகளை அறியும் அறிவையும் அருளினன் என்பார், 'சுவமதி தானும் சூட்டி' என்றார். சுவ மதி-சுய அறிவு; மங்களகரமான மதி.

அதன் பின், குருவாகி வந்து, பதி பசு பாச இயல்புகளை, வித்தகத் தன் திருவாக்கால் விளக்குவன்; அதுவும் போதாது என்று அறிந்து, உன்னைக் காண்! உன்னில் இருக்கும் என்னைக் காண்! அதறகுப் பிறகுதான், உலக நிலை கலக நிலை என்று உணர வரும் என்று, உள்ளங்கை நெல்லியென, கனிவொடு உயிர்க்குக் காட்டுவன்; இவைகளை நினைவுறுத்தும்

'பசுபதி பாசம் காட்டி'

எனும் பகுதியை ஓதும், போதே உணர்வு நெகிழ்கிறதே!

''கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன் என்றோர் திருப்பேர் கொண்டு-திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழும் அத்துவாக்கள் இருமூன்றும்—பாழாக
ஆணவ மான படலம் கிழித்தறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்
அடிஞானத் தால்பொருளும் ஆன்மாவும் காட்டிக்
கடியார் புவனமுற்றும் காட்டி—முடியாது
தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டி''

என்ற கந்தர் கலி வெண்பாவையும், அப் பகுதிக்கு எழுதியுள உரையையும் இங்கு எண்ணிக் கொள்வது நலம் தரும்.

நன்றுர்தரு புகலித் தமிழ் ஞானம்மிகு பந்தன்
குன்றுத் தமிழ் சொல்லக் குறைவின்றி நிறைபுகழே.

கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும், முகர்ந்ததே முகர்ந்தும், சுவைத்ததே சுவைத்தும், பயின்றிருந்த பழைய வாசனையறிவு பாழாக, சரியை கிரியை யோகம் முதலிய ஏதாயினும் ஒரு சாதனையைச் செய்! செய்! பூவுலகத்திற்கு அது குறித்துப் போ! போ! என்று, புனித விசாகன் விரட்டிப் போக்குகின்றான். இது குறித்த,

'புலம் மாயப்—படிமிசை போ என்று ஓட்டி'

எனும் பகுதியை, படிக்கும்போதே உள்ளம் படபடக்கின்றதே!

இவ்வுலகில் வந்தும், வாசனா மலத்தால வாழ வழி ஓராமல், காயத்தைப் பெருக்கி ஆன்மா கடைப்படுகின்றதே!

பொன்னிற்கு அடிமை; பொருளுக்கு அடிமை;
பெண்ணிற்கு அடிமை; பேச்சிற்கு அடிமை;
மண்ணிற்கு அடிமை, அடிமை, அடிமை;
அந்தோ! அந்தோ! முருகோனே! குமரேசா!
பெருமாளே! எளிய என் முன் எழுந்தருள்!
பவகதி பாழாக,

'பரகதி தானும் காட்டி அருள்வாயே'

என்னும் உள்ளுணர்வின் முறையீட்டை உணராதோ தெய்வம்? இதை எண்ணும போதே நெஞ்சம் இளகுகின்றதே! ஓம்!

வாழ்க திருப்புகழ் வளம்!

தேச சுதந்திர நன்னாளில் (15-8-57) திருவண்ணாமலையில் ஸ்ரீ அருணகிரி நாத சுவாமிகள் பெருவிழா

(அனுபவி)

முருகன் அடியார்களும் சந்தக் குயில் அருணை முனிவரது திருப்புகழைப் பயின்று, வாழ்க்கையில் பண்புறுத திளைத்து நிற்கும் பக்தர்களும், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மீ 15உ, திருவண்ணாமலையில் கூடிக் கலந்து இன்புறுகிறார்கள். மூன்றும் ஆண்

அரைபொருபுலி அதள உடையினன் அடியிணைதொழ, வருவினையெனும்
உரைபொடிபட உறுதுயர்கெட உயருலகெய்தல் ஒரு தலைமையே

டின் விழா அண்ணமலையில் மிக மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. சென்னை, பெங்களூர், திருச் செந்தூர், ஸ்ரீ வைகுண்டம், திருநெல்வேலி, மதுரை, மற்றும் வட ஆற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களிலிருந்தும் வந்த பல சபைகள், ஒரே மனத்துடன் விழாவில் பங்கெடுத்துத் தொண்டாற்றின.

முற் பகலில் சாது முருகதாஸ் அவர்கள் தலைமையில், கோபுரத்திளையனார் சந்நிதி முன் அமைக்கப் பட்ட திருஞான சம்பந்தர் பந்தலில், பாளையங் கோட்டை ராமகிருஷ்ண கம்பன் குழுவினரால் நாதஸ்வர இன்னிசையும், தேவார திருப்புகழ் சபைகளின் திருப்புகழ் பஜனையும் நடந்தன. பிற்பகலில் அதே பந்தலில் திருப்புகழ்மணி அவர்களின் முகவுரையுடன் சொற் பொழிவுகள் ஆரம்பித்தன. திருமுருக கிருபானந்த வாரியார், திரு. கி. வா. ஜகன்னாத ஐயர், குக ஸ்ரீ ரசபதி, ஆசிரியர் இளவழகர், திருமதி செண்பக வள்ளி அம்மையார் முதலிய பெரியோர்கள் அங்குக் குழுமி-யிருந்த பல்லாயிரக் கணக்கான அடியார்களை, தங்கள் உணர்ச்சி மிக்க சொற் பொழிவுகளால் ஆநந்தக் கடலில் மூழ்கச் செய்தார்கள். இடை இடையே ஸ்ரீ முருகதாஸ்ஜி நாம பஜனை விருந்தும் அடியார்களுக்குக் கிட்டியது.

இரவு ஸ்ரீ அருணகிரி நாத சுவாமிகள் திருவிக்ரகம் தீப அலங்காரம் செய்த ரதத்தில் பவனி வர, திரு வீதிகளில் 31 சபைகள் அணி அணியாக, ஒன்றன்பின் ஒன்றாக தேவார திருப்புகழ் பஜனை செய்து கொண்டு வந்த காட்சியே காட்சி. இரவு இரண்டு மணி வரை நான்கு மாட வீதிகளிலும் தமிழ் வேத நாத ஒலி தான். இறை உணர்வை எழுப்பிய இச்சூழ் நிலையால், அரோ ஹரா! முருகா! முருகா என்று மெய் சிலிர்த்துப் பரவச நிலையடைந்த பல்லாயிரவர்தம் இன்பக் கண்ணீர், "அன்பர் வார்த்த கண்ணருவி மஞ்சனச் சாலை" என்னும் திருமுறை உண்மையைத் தெளிவுபடுத்தியது.

கலைநிலவிய புலவர்கள் இடர் களைதரு கொடை பயில்பவர் மிகு
சிலைமலி மதிள் புடைதழுவிய திகழ்பொழில் திருமிழலையே.

அன்று திருவருணை பூகைலாசமாக தோற்ற மளித்தது. வருடத்துக்கு ஓர் நாளாயிருப்பினும், எவரும் சதா நினைந்து உருகி இன்புறும் தன்மையை யுடையதாகவே விழா விளக்கிற்று. அடியார் இணக்கத்தின் ஆநந்த நிலையை அனுபவிப்பதற்குச் சிறந்த தருணம் இதுவே. வாழ்க இப்படியே வையகம்!

ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.)

சுவாதிட்டானத் தலம்

செந்திலம்பதி இரண்டாவது படைவீடு என்பது போலவே இரண்டாவது ஆதாரமாகிய சுவாதிட்டானத் தலம். சுவாதிட்டானத்தில் எல்லாம் தன் வயப்படும் ஒரு முக உணர்ச்சி வரும். இதனைச் செய்தலினாலேதான் இங்குள்ள மூர்த்திக்குச் சிறப்பாகக் 'கந்தன்' என்ற திரு நாமம் வழங்கும். 'செந்திற் கந்தப் பெருமானே' என வருவதும் உன்னுக. கந்தன் காதல் உமை மைந்தன். அம்மையால் ஆறாகிய வேறு உருவங்களை ஒன்றாகச் இணைத்து 'கந்தன்' என்று பேரிடப்பட்டவன்.

"அன்னவள் கண்டவ் வுருவ மாறினையும்
தன்னிரண்டு கையால் எடுத்தணைத்துக்
கந்தன் எனப் பேர்புனைந்து மெய்ஆறும் ஒன்றாக மேவுவித்து"
(கந்தர் கலிவெண்பா)

எனவே, உணர்ச்சி ஒருமைக்கு உதவ வல்லான் கந்தனே. அவன் சுவாதிட்டானத் தெய்வமாய் இத்தலத்தில் துலங்குகிறான். அலைகின்ற உயிருக்கு அமைதி அளிக்கவே ஆன்ம லய நிலையமாகிய அலைவாய் செந்திலில் அமர்ந்தருளினான் என்று அறிகிறோம்.

ஆவினன்குடியின் அருமைப் பாட்டை இனி ஆராய்வோம்.

திரு ஆவினன் குடி :

உயிருக்கு உறுதியளிக்கும் வகையில் திருச்செந்தில் பதியோடு தொடர்புடையது திரு ஆவினன் குடியாகும்.

பவமகிதொழில் அதுநினைவொடு பதுமநன்மலர் அதுமருவிய
சிவனதுசிவ புரம்நினைபவர் செழுநிலனினில் நிலைபெறுவரே.

திரு ஆவினன் குடி என்ற பெயரைப் பற்றிப் புராணம் கூறுவதாவது :—

புராணத்தின்படி திரு —(இலக்குமி) + ஆ—(காமதேனு) + இனன் (சூரியன்) + கு (பூமி) + டி (அக்னி) ஆகியோர் பூசித்தது என்பதாகும். இதிலும் ஒருண்மை தெரிகிறது. உயிர் வாழ்க்கைக்கு உரியவை செல்வம், பால் முதலிய பண்டங்கள், சூரிய ஒளி, மண்ணின் விளைவுகள், ஜீரணிக்கத்தக்க வெப்ப நிலை ஆதியன எல்லாமுதவும் இறைவன் நிலையம் என்பது பொருள் போலும். மேலும் இத்தலம் மும்மைக்கும் பயன் தருவது போன்ற குறிப்புங் கொண்டுள்ளது. சூரியன், பூமி, அக்னி என்பவை இம்மை வாழ்விற்கு இன்றியமையாதவை. காமதேனு என்பது கற்பக நாடாக வானுலகாம் அம்மை (மறுபிறவி)க்கு உரிய போக பூமியிலுள்ளது எனவே மறுமையில், புண்ணியம் செய்வோர் அடையும் போக பூமியான விண்ணவர் வாழ்வை விளக்குவது. திரு என்பது முத்திச் செல்வம். இந்தப் பொருளில் தான் திருமுறை என்ற பெயர் நமது சமயத் தோத்திர மறைகளுக்கு வழங்குகின்றது. (திரு-முத்திச் செல்வத்தை அடைவிக்கும்; அருள் நெறி அறிவிக்கும்) முறை—நூல்). நமது சமய குரவர்களும் திரு என்பது முத்திச் செல்வம் என்றே அருளிப் போந்தனர்.

"திருவும் மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்"
"பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை"
"சென்றடையாத திருவுடையானை"—(தேவாரம்.)
"செத்திலடியார் திருவில் என்னை வைத்தாளரோ"
(பாம்பனடிகள்.)

ஆகவின் திரு என்பது மறுமையிலடையத் தக்க வீட்டுச் செல்வத்தைக் குறித்ததாம். எனவே திரு ஆவினன் குடி வழிபாட்டால் இம்மையில் சுகம், அம்மை (வருபிறவி) யில் யோகம், மறுமையில் முத்திச் செல்வமும் தரும் என்பதாம்.

அலைகடல்நடு அறிதுயலமர் அரிஉருஇயல் பரனுறைபதி
சிலைமலிமதில் சிவபுரநினை பவர்திருமகளொடுதிகழ்வரே.

மும்மை நலனும் இம்மையில் வரும் :

மேலே கூறிய நலங்கள் அத்தனையும் இம்மையிலே தரும் என்பதை ஆவினன் குடியிலுள்ள பழநிமலைப் பாசுரங்கள் நமக்கு அறிவிக்கின்றன.

இம்மை நலங்கள் :

இவ்வுலக வாழ்விற்குரியவை உறுப்புக் குறைவில்லாத உடல் வளம், வறுமை நோயற்ற வாழ்வு, தீர்க்காயுள், உயர் குடிப்பிறப்பு, பூரணஞானம் என்பவைகளே. இவை யனைத்தும் ஆண்டவன் அருளுவான் என்பதைப் பழநிப் பதிகத்தில்,

"செவிடு குருடு வடிவு குறைவு சிறிது மிடியும்—அணுகாதே அமரர் வடிவு மதிக குலமும் அறிவு நிறைவும்—வரவேநின் அருள தருளி எனையும் மனதொடு அடிமை கொளவும்— வரவேணும்"

என்பன போன்ற வேண்டல்களைக் காண்க.

விண்ணவர் யோகம் :

வரும் பிறவியில் பெறத்தக்க யோக பூமிக்கு உளதாம் இன்பங்களும் இம்மை தருவான் என்பதைப் பழநித் தலத்துக்கே சிறப்பாக்கி, பழநியில் தேவலோகத்து தெய்விகக் கற்பக மலர்கள் சூழும் வண்டுகளால் உதிர்க்கப் படுகின்றன கூறுவார்,

"சுரலோக—பரிமள கற்பகடவி அரியளி சுற்று பூவுதிர் பழநி மலைக்குள் மேவிய பெருமாளே"

[தேவலோகத்து மணமிக்க கற்பகச் சோலையில் வண்டுகள் சூழ்ந்து மொய்ப்பதால், கற்பகமலர்கள் உதிரப் பெற்ற பழநிமலை விரும்பியமர்ந்த பெருமாளே]

என்கிறார். எனவே கற்பகமலர்களும் மண்ணுட்டவர்க்கு கிடைக்கின்றன என்பதால் விண்ணவர் போகமும் இங்கே கிடைக்கும் என்க. மேலும் அடிக்கடி இந்திரனே வந்து வணங்குகின்றான் ஆவினன் குடியில்.

"அமரர்க்கிறையே வணங்கிய பழநித்திரு வாவினன்குடி அதனிற் குடியா யிருந்தருள்—பெருமாளே"

கழுமலம்அமர் கனலுருவினன அடியிணை தொழும் அவர் அருவினை எழுமையும்இல, நிலவகைதனில், எளி(து) இமையவர் வியனுலகமே.

என்றால் தேவேந்திர போகம் ஆவினன் குடியான் அடியார் கட்குக் கிடைப்பது அரிதாமோ?

முத்தி நலம் :

இவ்வாறு முறையே ஆவினன்குடி அடியார்கள் இம்மை நலமும், விண்ணவர் போகமும் ஆரத்துய்த்த பின், அதன் மேல் உள்ள பாசத்தை அகன்று கவிதை பேசிப் பணிந்து குக நேசத்தை அவாவி நிற்பர். அப்போது இறைவன் அடியராவிக்குள் நின்றுலவுவான். அவர்களது சிந்தை மெய்ப் பொருளாகிய ஆறெழுத்து பேசி நிற்கும். அப்போது ஓர் சிவஞானப் பேரொளி பொலிந்து நிற்கும். அத்தகைய ஒளி மாறாது வளரும் சிறப்புடையது பழநிமலை என்று கூறுவது நோக்குக.

"அடியராவிக்குள் நின்றுலவிவரு—பெருமாளே"

"பணியும் அடியார் சிந்தை மெய்ப் பொருளதாக நவில் சரவணபவா வென்று வற்கரமுமாகி வளர் பழநிமலை."

எனவே மும்மை நலமும் இம்மையில் தந்து நமது ஆவி சாவியாகாமல் அருளுகின்றான் என்றறியலாம். காசியில் இறக்க முத்தி என்பர். அது எல்லோருக்கும் கை கூடுவதன்று. பழநி வழிபாடே அதனைத் தரும். இது

"படிக்கின்றிலை பழநித் திருநாமம், படிப்பவர்தாள் முடிக்கின்றிலை...எங்ஙனே முத்தி காண்பதுவே? என்று எதிர் மறையாலும் விளக்கப் பட்டுள்ளது. பழநி காசியிலும் சிறந்தது என்பார் "காசியின் மீறிய பழநியங்கிரி" என்கிறார். சுருக்கமாக பழநித் திருவாவினன் குடி இம்மை மறுமை இன்பம் எல்லாம் தரும் இஃது

"இகபர சௌபாக்யம்—அருள்வாயே
பழநிமலை வீற்றருளும் வேலா"

என்பதாலறியக் கிடக்கின்றது. இத்தலத்தில் அமைந்த பிற சிறப்புக்களை அடியேன் எழுதியுள்ள 'அதிசயம் அநேக முற்ற பழநி' என்ற நூலில் பரக்கக் காணலாம்.

மேலே கூறியவற்றிலிருந்து ஆவினன் குடித் தியானம், ஆண்டவனை நம் ஆவி (உயிரில்) யில் என்றும் குடியாக நின்று மும்மை நலங்களையும் இம்மையில், அடையச் செய்யும் என்பது புலனும்.

"KINSHIP"

Kinship of the flesh leads to diversity, and the warring factors of the world mostly draw for their discriminations, from a relationship that in a greater or lesser degree is built on blood and flesh. Certain common characteristics are to be found among those who inherit the blood of the ancestor. The blood of the family, of the caste, of the nation, amongst other groups are frequently referred to as leading to differentiations and discriminations of men and their pattern. Family feuds, social struggles, political disturbances and national fratricides all arise from the emphasis laid on blood distinctions. The heights of universal realisation and the truths of the lives of the world mahatmas are unable yet to put out of the human mind the discrimination and cruelties of race, colour, caste and denomination.

The Sages of India, in the realisation of the true nature of Brahman, declared that all is one; God is one and man is one. This realisation transcends the distinctions of the flesh, and is glorified in the mental realisation of the all world unity—the true advaitism of the Upanishads and the Vedanta. That is why that the realisation of universal brotherhood and the ultimate unity of all God and man is declared to be the true test of a *Gnani*. Mankind must soon pass from the limited kinship of the flesh to the unlimited kinship of the spirit—that universal kinship that comes from the mental realisation that all men are of God and the whole world is kin. Did not the ancient tamil philosopher declare " The universe is my native land and all humanity my kin."

—*Thiruppugal Mani*

311

அங்கண்நெடு மதிள்புடைசூழ் அயோத்தி யென்னும்
அணிநகரத்(து) உலகனைத்தும் விளக்கும் சோதி;
வெங்கதிரோன் குலத்துக்கோர் வித்தாய்த் தோன்றி,
விண்முழுதும் உயக்கொண்ட வீரன் தன்னைச்,
செங்கண்நெடுங் கருமுகிலை, இராமன் தன்னைத்,
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எங்கள்தனி முதல்வனை, எம்பெருமான் தன்னை,
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே!

MAHAMAHOPADHYAYA
DR. U. V. ... LIBRARY,
BESANT NAGAR :: MADRAS-90.

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பீடீ
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1957 புரட்டாசி—அமிர்தவசனி)

—312—

Coffee
Ours for Quality
RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0

தேவி தாஸர்கள்	(அற்புத வரலாறு)	(அச்சில்)
சிவநேயச் செல்வர்கள்	,,	,,
கணபதி பக்தர்கள்	,,	,,
முருகனடியார்	,,	,,

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18